for young
friends of fmpb

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

இளைஞர் மாத இதழ்

# வர்க்கக் களத்தில் எளியோர் பக்கம் இருப்போம்!



களத்தில் 2026 வீரியம்



Vol-40-Issue 7 - July - 2026

Private circulation only

# இயேசுகிறிஸ்துவின் ஆசாரியத்துவம்

லேவி கோத்திரத்து ஆசாரியர்களால் மனிதனைப் பூரணப்படுத்த முடியவில்லை. ஆனால் கிறிஸ்து நமக்காக ஒரு புதிய, மேலான வழியைத் திறந்து தந்துள்ளார். இங்கு எபிரெயர் 7ஆம் அதிகாரம் காட்டும் துதிக்களம் என்பது மாறாத, அழியாத, நித்தியமான கிறிஸ்துவின் ஆசாரியத்துவமே ஆகும்.

**நீதி மற்றும் சமாதானத்தின் ராஜாவாகிய கிறிஸ்து:**

மெல்கிசேதேக்கு என்னும் ராஜா ஆபிரகாமைச் சந்தித்து ஆசீர்வாதம் கொடுத்தார். அவருடைய பெயரின் அர்த்தம் "நீதியின் ராஜா" என்பதாகும். அவர் சாலேமின் ராஜாவாயிருந்ததால் "சமாதானத்தின் ராஜா" என்று அழைக்கப்பட்டார்.

**துதிக்களம்:**

இயேசுகிறிஸ்து நமக்கு பாவ மன்னிப்பைத் தந்து தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமான்களாக்கிய "நீதியின் ராஜா". நம் இருதயத்திற்கு உலகத்தால் தர முடியாத அமைதியைத் தந்த "சமாதானத்தின் ராஜா". முடிவில்லாத ஜீவ வல்லமையுடைய இவரை நாம் எந்நாளும் துதிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

**லேவி ஆசாரியத்துவத்தை விட மேலானவர் (4 - 11):**

**துதிக்களம்:**

மனித பலவீனங்களோடு இருந்த ஆசாரியர்களைப் போலல்லாமல், எந்த குறைவுமற்ற உன்னத ஆசாரியராக இயேசு இருக்கிறார். சடங்காச்சாரமான சட்டங்களினால் அல்ல, மாறாக நம்மை ஆவிக்குரிய நீதியில் ஆசீர்வதிக்கும்படி உயர்ந்த அடைக்கலமாய் வந்த நமது பிரதான ஆசாரியரை நாம் ஸ்தோத்தரிப்போம்.

**மாறாத நித்திய ஆசாரியத்துவம் (23 - 25):**

பூமிக்குரிய ஆசாரியர்கள் மரணமடைந்தால், ஆசாரியப் பொறுப்பு ஒருவரிடமிருந்து ஒருவருக்கு மாறிக்கொண்டே இருந்தது. ஆனால் இயேசுகிறிஸ்து மரணத்தை ஜெயித்து என்றென்றைக்கும் உயிரோடிருக்கிறபடியால், அவருடைய ஆசாரியத்துவம் மாறாததாயிருக்கிறது.

**துதிக்களம்:**

நமது ஜெபங்களைக் கேட்டு, பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து, நமக்காக எப்பொழுதும் பரிந்து பேசுகிற (Intercession) ஒரு விசுவாசமுள்ள நண்பனாக இயேசு இருக்கிறார். நம்மைப் பாதியிலேயே கைவிடாமல், "முற்றுமுடிவாக" (Ultimate Salvation) இரட்சிக்க வல்லமையுள்ள தேவனாக அவர் இருப்பதால் நமது துதியின் சத்தம் ஓங்கி ஒலிக்கட்டும்.

**பரிசுத்தமும், மாசற்றதுமான உன்னத பலி (26 - 28):**

பூமிக்குரிய ஆசாரியர்கள் தினமும் முதலில் தங்கள் சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களின் பாவங்களுக்காகவும் பலியிட வேண்டியிருந்தது. ஆனால் கிறிஸ்து பாவமில்லாத தூயவராக தம்மைத்தாமே ஒரே தரம் பலியாக ஒப்புக்கொடுத்தார்.

**துதிக்களம்:**

பரிசுத்தரும், குற்றமற்றவரும், நமக்காக உன்னத பலியான அந்த பரிசுத்த ஆட்டுக்குட்டியாம் கிறிஸ்துவை ஆராதிப்பதே நம் வாழ்வின் மிகச் சிறந்த துதிக்களமாகும். இந்த துதிக்களம் சடங்குகளையோ, மனிதர்களையோ சாராமல், நமக்காக எப்பொழுதும் பரிந்து பேசும் உன்னத இரட்சகரைக் கொண்டிருப்பதால் நாம் தைரியத்தோடும், நன்றியறிதலோடும் துதிபலிகளைச் செலுத்துவோம்.



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம் வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

**VISION**

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

**OBJECTIVE**

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth Wing**


www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266


**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX


| | |
|---|---|
| இளம் வாலிபர்களின் அறிவியல் களம் - French Curve | - 5 |
| லோபோ - வாழ்க்கை வரலாறு | - 6 & 7 |
| பிரான்ஸ் | - 10 |
| விளையாட்டு காயம் | - 12 |
| Screen Gambling | - 14 |
| உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா? | - 15 |
| அவசரப்படாதே... அவதிப்படாதே... | - 20 |
| கனம் பெற்ற யாபேஸ் | - 22 |


# வர்க்கக் களத்தில் எளியோர் பக்கம் இருப்போம்!

நீதியாய் நியாயத்தீர்ப்பு செய்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாலிபர்கள் அனைவருக்கும் எங்களுடைய அன்பின் வாழ்த்துகள்! செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் தனித்தனியே பிரிக்கும் ஒரு மேய்ப்பன் போல இயேசுகிறிஸ்து இருப்பார். எதன் அடிப்படையில், எதைக் கொண்டு கிறிஸ்து மனிதர்களை வேறு பிரிப்பார்? பூமியிலே வாழ்ந்த நாட்களில் இயேசுவுக்கு அன்பின் நற்செயல்களைச் செய்தவர்கள் அவரது வலது பக்கத்தில் நிறுத்தப்படுவார்கள். இவர்களுக்கு இயேசுவுக்காகத் தாங்கள் செய்தது எதுவும் நினைவிருக்காது. தாங்கள் செய்த உதவிக்கு பதிலாக எந்த பலனையும் எதிர்பார்க்காதவர்கள். தனக்கு திரும்ப அவர்கள் உதவி செய்வார்கள் என்ற எதிர்பார்ப்பு இல்லாமல் உதவுபவர்கள், அன்பினால் கிரியைச் செய்கிறவர்கள். இப்படி செய்கிறவர்களை இயேசு **“மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்”** என்பதாக மத்தேயு 25:40இல் கூறுகிறார்.

சமூகத்திலுள்ள மக்களின் பொருளாதாரம், வருமானம் மற்றும் வாழ்க்கை முறை ஆகியவற்றின் அடிப்படையில் மக்களைப் பிரிக்கும் குழுக்கள் **“வர்க்கம்”** என குறிப்பிடப்படுகிறது. நம்மைச் சுற்றிலும் காணப்படுகின்ற மக்களை நாம் இதன் அடிப்படையில் தான் பிரித்துப் பார்க்கிறோம். ஆனால் இயேசு சகல மனிதர்களையும் நேசிக்கிறார். அவர்களை தமது சகோதர, சகோதரிகளைப் போல நேசிக்கிறார். உயர் சமூகத்தினரால் ஒதுக்கப்பட்டவர்கள், தள்ளப்பட்டவர்கள் என அனைவருக்கும் இயேசு உதவி செய்கிறதை நாம் வேதத்தில் காண்கிறோம். மத். 15:21-28 வரையுள்ள பகுதியில் கானானியப் பெண் ஒருத்தியின் மகளுக்கு இயேசு உதவி செய்ததை நாம் அறிந்திருக்கிறோம்.

பிரியமான வாலிபர்களே! நம்மைச் சுற்றிலும் பல தேவைகளோடு இருக்கின்றவர்களுக்கு இயேசுவின் அன்பினால், எந்த ஒரு பலனையும் எதிர்பார்க்காமல் உதவிச் செய்வோம். வெளி 20:12இல் **“மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.”** என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. தேவனுடைய கடைசி நியாயத்தீர்ப்பு நாளில் நம் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்பு உண்டு என்பதை நினைவில் கொள்வோம். இயேசுவைப்போல அன்பினால் வர்க்கக் களத்தில் எளியோர் பக்கம் இருப்போம்.

தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

கிறிஸ்துவின் உன்னதப் பணியில்
*ஜெ. டேனியல் அருள்மணி*

# போலி நீதிபதி
# தாண்



Fake means a work of art that seems to be real but is not. அதாவது ஒன்றை நகல் செய்து, அது உண்மையானது என்று மற்றவர்களை நம்பச் செய்ய பொய்யாக உருவாக்குவது.

தகப்பன் யாக்கோபுவின் ஐந்தாவது மகனான தாணைக் குறித்து "போலி நீதிபதி" என்ற தலைப்பில் நாம் சிந்திக்க அழைக்கப்பட்டுள்ளோம். தாண் யாரைப் போல் தன்னை அடையாளப்படுத்த முயன்றான்? அதற்காக என்ன போலித்தனம் செய்தான்? என்பதை இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

ராகேல், தன் சகோதரி லேயாள் மீது கொண்ட தீவிர பொறாமையாலும், தேவன் தனக்கென வைத்திருந்த தேவ திட்டத்தைக் குறித்த பொறுமையின்மையாலும் வலுக்கட்டாயமாக முயன்று தன் வேலைக்காரியாகிய பில்காளை யாக்கோபுவிற்கு மனைவியாகக் கொடுத்ததினால் தாண் பிறந்தான். "தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும் கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார்" என்று சொல்லி அவனுக்கு தாண் என்று ராகேல் பேரிட்டாள் (ஆதி. 30:6). தாண் என்பதற்கு நியாயந்தீர்ப்பவன் (To Judge), நியாயந்தீர்க்கப்பட்டவன் (He Judged) என்ற இரண்டு வித அர்த்தங்கள் உள்ளது. நீதியின் தராசு, தாண் கோத்திரத்தாரின் சின்னமாக உள்ளது.

**தாணின் மனநிலையும், சுபாவமும்:**

பொதுவாக தாணின் மனநிலை தன் சுய பிரஸ்தாபத்தையும், இருப்பதில் திருப்திக் கொள்ளாத விருப்பத்தையும் வெளிப்படுத்துகிறது. கானானின் சுதந்திர பாகத்தைப் பெறுவதில் தாண் கோத்திரத்தார் கடைசியாக சீட்டைப் பெற்றனர். இவர்களின் சுதந்திரம் தேசத்தின் எல்லையான மத்திய தரைக்கடலை ஒட்டிய பகுதியில் தெற்கே யூதாவுடனும், வடக்கே எப்பிராயீம் மற்றும் கிழக்கே பென்யமீனுடனும் இருந்தது. அவர்கள் நிலப்பகுதி ஒடுக்கமாகவும் இருந்தது என்று யோசுவா 19:47இல் வாசிக்கிறோம். எனவே அவர்கள் தங்கள் சொந்த முயற்சியால் (ராகேலைப் போன்று) எல்லையை விரிவாக்கும்படி வடகோடியில் சீதோனிய மக்கள் குடியிருந்த லாயீஸ் என்று அழைக்கப்பட்ட லேசேமுக்குச் சென்று அதைக் கைப்பற்றி அதில் குடியேறினார்கள். இவ்வாறு அவர்கள் தங்கள் வாழ்விடத்தை மாற்றினார்கள். பின்னர் எப்பிராயீம் மலை தேசத்தானாகிய மீகாவிடமிருந்த ஆசாரியனையும், அவனுடைய வீட்டில் வைத்திருந்த விக்கிரகங்களையும் ராகேலைப் போல திருடி (ஆதி. 31:32), தாங்கள் கைப்பற்றியிருந்த, தங்கள் பெயரிலேயே நிறுவியிருந்த தாண் பட்டணத்திலே ஸ்தாபித்துக் கொண்டார்கள் (நியா. 18:29, 30). உண்மையான ஆசரிப்புக் கூடாரமும், தேவனுடைய பிரசன்னமும் சீலோவில் இருந்தபோதிலும் அவர்கள் விக்கிரகங்களைக் கொண்டு தங்கள் வழிபாட்டு முறையை மாற்றினார்கள். பின்னர் எருசலேமிலே கர்த்தருக்கென்று ஆலயம் கட்டிய சாலமோன் ராஜாவின் காலத்திற்கு பின்பு, பிரிக்கப்பட்ட இஸ்ரவேல் தேசத்தில், வடபகுதியில் ராஜாவான யெரொபெயாம் தனது அரசியல் அதிகாரத்தை வலுப்படுத்திக்கொள்ள, பொன்கன்றுக் குட்டிகளை உருவாக்கி ஒன்றைப் பெத்தேலிலும், மற்றொன்றைத் தாணிலும் ஸ்தாபித்து (1 இரா. 12:28-31), இஸ்ரவேலிலே தங்கள் வழிபாட்டு ஸ்தலத்தை மாற்றினார்கள்.

**தகப்பனின் ஆசீர்வாதம்:**

ஆதி. 49:16-18இல் உள்ள தாணைக் குறித்த தகப்பன் யாக்கோபுவின் ஆசீர்வாதம், அக்கோத்திரத்தின் எதிர்காலத்தை உருவகப்படுத்தியுள்ளது. "தாண் இஸ்ரவேல் கோத்திரங்களில் ஒரு கோத்திரமாகி, தன் ஜனத்தை நியாயம் விசாரிப்பான்" என்ற வாக்கியம் தாண் கோத்திரத்தைச் சேர்ந்த சிம்சோனின் வாழ்வில் பிரபலமாகியது (நியா. 13:1-5). "தாண் குதிரையின்மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய், அதன் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப் போலவும், பாதையில் இருக்கிற விரியனைப் போலவும் இருப்பான்" என்ற வாக்கியம் சர்ப்பத்திற்கு அடையாளமாக்கப்பட்ட தந்திரக் குணத்தோடு மறைந்திருந்து தாக்குதல் மற்றும் திடீர் தாக்குதல் போன்ற உத்திகளைப் பயன்படுத்தி வலிமையான பெரிய எதிரிகளையும் வீழ்த்தினார்கள். உண்மையான நீதியும், இரட்சிப்பும் மனித முயற்சியாலோ அல்லது தந்திரத்தாலோ அல்ல, கடவுளிடமிருந்து மட்டுமே வரும் என்பதை உணர்ந்திருந்த யாக்கோபு, "கர்த்தாவே உம்முடைய இரட்சிப்புக்குக் காத்திருக்கிறேன்" என்ற விண்ணப்பத்தோடு தனது ஆசீர்வாதக் கூறலை முடிக்கிறார்.

**தலைவனின் தரிசனம்:**

தலைவனின் தரிசனம் தாணைக் குறித்து "தாண் ஒரு பாலசிங்கம், அவன் பாசானிலிருந்து பாய்வான்" (உபா. 33:22) என்று கூறப்பட்டுள்ளது. அதாவது அவன் பாசானிலிருந்து பாயும் பாலசிங்கம். தாண் ஒரு சிறிய கோத்திரமாக இருந்தாலும், தங்கள் எதிரிகளுக்கு எதிராக விரைவான திடீர் ராணுவ தாக்குதல்களைத் தொடுப்பதில் ஒரு இளம் சிங்கத்தைப் போன்று செயல்படும் ஆக்ரோஷமான இயல்பைக் கொண்டிருந்தனர். பாசான் என்பது கலிலேயக் கடலுக்கு கிழக்கே இருந்த காட்டு மிருகங்களின் இயற்கையின் வாழ்விடமாகவும் (எசே. 39:18), கர்வாலி மரங்கள் நிறைந்த பகுதியாகவும் (எசே. 27:6) அறியப்படுகிறது. பல சிகரங்களைக் கொண்ட எர்மோன் மலையில் கோலான் குன்றுகளில் உயர்ந்த பர்வதமாக பாசான் இருந்தாலும், எருசலேம் குன்றுகளின் மீது இருக்கும் பரிசுத்த மலையான சீயோனையே யூத ராஜ சிங்கமான கர்த்தர், தமது நிரந்தர வாசஸ்தலமாக தெரிந்துகொண்டார் (சங். 68:15, 16). உலர்ந்த மணல் (Light Soil) என்று அர்த்தம் கொண்ட பாசான், ஆன்மீக எதிர்ப்பை உறுதி செய்யும் அடையாளமாகவும், கோட்டை (Fortress) என்று அர்த்தம் கொண்ட சீயோன், ஆன்மீக விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் அடையாளமாகவும் உள்ளது.

-இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்



# French Curves

இளம் வாலிபர் பகுதி - அறிவியல் களம்

MRS. JOYLINE JEROME

*My dear teen Boys and Girls, happy July month greetings to you and your family.* இப்பதான் *School* openஆன மாதிரியிருந்தது. அதுக்குள்ள *one month* முடிஞ்சிருச்சி. *Time*அ *Correct*ஆ *use* பண்ணலைனா. *lastla* நாமதான் *suffer* ஆகுவோம். ஒரு சின்ன *suggestion, daily subject*அ அன்னனைக்கே *finish* பண்ணுறதுக்கு *try* பண்ணுங்க. *Atleast* அந்த *weekend*ஆவது *finish* பண்ணிருங்க. நாளைக்கு படிக்கலாம், அப்புறம் பாத்துக்கலாம்ன்னு *time*அ *waste* பண்ணினா, ஒருநாளும் எதையும் படிக்கவே முடியாது. *Disipline*அ படிக்காட்டி, எந்த ஒரு *Concept*டையும் *deep*ஆ *understand* பண்ணிக்க முடியாது. நாளடைவில் *procrastination* நம்ம *habbit*ஆ மாறிடும். இத நியாபகம் வைச்சிக்கிங்க. இந்த *teen page plan* நீங்க அடிக்கடி *use* பண்ணுற *Geometry Box*ல இருக்கிற *things* தான். *Last 6 month*ஆ *compass, divider, protractor, set square 45° and 60°, Ruler*ன்னு எல்லாத்தையும் தொடர்ச்சியா பார்த்துட்டு வரோம். அந்தபடி இந்த *month* நாம பார்க்கப்போற ரொம்ப *unique*ஆன *instrument* தான் *French Curves.*

*French Curves Mathematics, Geometry* தாண்டி *Dress making and Fashion technology*லேயும் ரொம்ப *wide*ஆ *use* ஆகுது. *Civil and highway Engineering*ல *natural*அ வற்ற *curves*அ *road construction profils draft* பண்ணுறதுக்கு *French curves use* பண்ணுவாங்க. (*Non-linear*ஆன *points*அ *connect* பண்ணி *arc* வரையறதுக்கு *compass helpful*ஆ இருக்காது. *Non-linear*அ *curve* வரையறதுக்கு *correct*ஆன *instrument French curves*தான்) சரி *easy*ஆ *understand* ஆகனும்ன்னா *parabola, hyperbola* எல்லாம் வரையுறதுக்கு *best*ஆன *instrument.*

*Okay,* இப்ப *Bible application time geometry construction*ல ஒரே *plane*ல வர்ற ரெண்டு *points*அ *compass* வச்சி *arc* வரைஞ்சி *shape*அ *complete* பண்ணிறலாம். அந்த *points two different plane*ல இருந்திச்சினா, அத *Non-linear*ன்னு சொல்லுவோம். எந்த *Non-linear geometry*ன்னாலும், *Profile*ன்னாலும் நமக்கு வரைய தேவைப்படுறது *French curves.* இந்த *Non-linear profile* நமக்கு ஒரு பாடத்தை கற்றுதருது. நம்ம *life*வும் *smooth, straight linear*ரான *path* கிடையாது. அது *full*ஆவே *Non-linear pattern* இருக்குது. நிறைய *up & down*னோட சேர்ந்த கரடுமுரடான *path* தான் நம்ம *life.* இந்த *understanding* நமக்கு ரொம்ப முக்கியம். அப்பதான் ஒரு *discipline Christian life style*லுக்குள்ள இருப்பீங்க.

*Points non-linear*ஆ இருந்தாலும், *French curve* அத *connect* பண்ணி ஒரு அழகான *profile*ஆ மாத்துற மாதிரி, *Non-linear*ஆன நம்ம *life*யையும் ஒரு அழகான *profile Jesus Christ*ஆல மட்டும்தான் மாத்த முடியும். நம்மை சுத்தியிருக்கிற நம்முடைய *friends & classmates*அ கவனிச்சுப் பாருங்க. *Cinema* பாக்குறதும், *Cinema* பாட்டு பாடுறதும், கேட்கிறதும் அவங்களுக்கு எந்தவொரு *guilt*டையும் ஏற்படுத்துவது இல்லை. ஆனா *Christian life style*லயிருக்குற நமக்கு அது நம்மையும், கடவுளையும் பிரிக்கும் காரியம். அதனால நாம அதை செய்றதுக்கும், செய்றவங்க கூட இருக்கிறதுக்கும் விரும்புவதில்லை. உலகத்தை *follow* பண்ணுறவங்களுக்கு இது ஒரு சாதாரண (*Linear*) விசயம். இப்படி இந்த *linear*ரான *life style*ல *majority*யான *people follow* பண்ணுறதால நாமும் *follow* பண்ணனுங்கிறது அவசியமில்லை. *Christian lifestyle* இந்த உலகத்துக்கு *exact opposite*ஆன *Non-linear life style.* அது *christ*அ *life*ஆ *reflect* பண்ணுற *life style.*

*Bible*ல வர்ற *Abraham*அ பாருங்க. அவர், *family*யா மெசொப்பொத்தாமியாவிலே இருந்திருக்கலாம். ஆனால் *Abraham* கானான் வந்து சேர்றதுக்கு 25 வருஷமா நடந்தாரு. தன்னுடைய அண்ணனுங்க பண்ணின *mistake*அ தன்னுடைய அப்பா கிட்ட சொல்லாம, அவங்ககிட்ட *comparmise* ஆகியிருந்தா *Joseph*க்கு எந்த கஷ்டமும் வந்திருக்காது. தன்னுடைய *Brothers* பத்தி அப்பாகிட்ட சொன்னதாலதான், அவன *Slave*ஆ *egypt*க்கு வித்துப்போட்டாங்க.

நம்முடைய *Saviour*ரான *Jesus Christ*அ பத்தி வர்ற வசனத்தை பாருங்க "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலி. 2:7).

*Jesus Christ* பூமிக்கு வரலைனா, கடவுள் எப்படிபட்டவர்ன்னு நமக்கு சுத்தமா தெரிஞ்சிருக்காது. அவர் தன்னுடைய எல்லா *Supermercy*யையும் விட்டுவிட்டு *human form*க்கு வராமலிந்தா அது அவருக்கு *comfort.* ஆனா தன்னுடைய எல்லா *comfort*டையும் தூக்கி எறிஞ்சிட்டு *Non-linear path*ஆ எடுத்ததாலதான் நமக்கு *Salvation* கிடைச்சிருக்கு.

*So, my dear teens,* இந்த உலகத்தில இருக்கிறவங்க மாதிரி வாழுறது, நம்முடைய *calling* கிடையாது. இந்த உலகத்தோட *colour & flavour* இல்லாத *Christ centered, peaceful & contented life style*தான் நம்முடைய *calling.* இந்த *life style*ல *tough, non-linear,* கரடுமுரடானதுன்னு ஏன் சொல்லுறோம்? நம்மை சுத்தியிருக்கிற *90% of the people* இந்த *pattern*அ *choose* பண்ணுறதில்லை. இது கூட்டமா போகும் பெரும் வழியில்லை. இது இயேசு கிறிஸ்துவுடன் இணைந்து நடக்கும் வழி. இப்படி நடக்கும் போது ஏற்படுற எல்லா *sufferings*யும் தாங்குறதுக்கும், கையாளுறதுக்கும் கடைசியா நம்ம *Goal*லான *eternal life*யை தர்றதுக்கும் இயேசுகிறிஸ்துவுக்கு முழு வல்லமையும், பெலனும், கனமும், அதிகாரமும் இருக்குது. இப்படியான இந்த *Christ centered life style*ல வாழுறதுக்கும், இந்த *life style*ல *continue* பண்ணுறதுக்கும் அவர் உனக்கு பெலன் தருவாராக. *So, Untill then see you next month, Bye!*

MR. B. BENJAMIN

# லோபோ

ஆப்பிரிக்க கண்டத்தில் வசித்த "லோபோ" என்ற தம்பியைப் பற்றியக் கதை.

16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பா, அமெரிக்கா பகுதியில் காணப்படும் மக்கள், கப்பலில் ஆப்பிரிக்கா சென்று, அங்குள்ள மக்களைப் பிடித்து வந்து தங்களுக்கு அடிமைகளாக பயன்படுத்தி வந்தனர். இந்த அடிமைகளை அவர்கள் பிடித்துக்கொண்டு வந்து, கடைகளில் காய்கறி விற்பதுபோல விற்பார்கள். இப்படி இந்த அடிமைகளை வாங்கிச் செல்பவர்களும், அவர்களை கொடுமையாய் வேலை வாங்குவார்கள். அடிமையாய் விற்கப்பட்டவன் எந்தவித சுதந்திரமும் இல்லாமல் தனது வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட வேண்டியதுதான்.

இந்த நூற்றாண்டு பகுதியில் ஆப்பிரிக்காவின் ஒரு பகுதியில் லோபோ என்று ஒரு குட்டி தம்பி வாழ்ந்து கொண்டிருந்தான். லோபோவும், அவன் சிநேகிதனும் விளையாடிக்கொண்டிருக்கும் போது திடிரென்று டுமீல்... டுமீல்... என்று துப்பாக்கி சுடும் சத்தம் கேட்டது. இதைக் கேட்டவுடன் எல்லோரும் அடிமைகளாகப் பிடிக்கிறவர்கள் வந்துவிட்டார்கள். காட்டை நோக்கி ஓடுங்கள் என்று சத்தமிட்டு ஓடிக்கொண்டிருக்கும் போது லோபோ தம்பியும் ஓட முயற்சித்தான். அந்த சமயம் ஒரு முரட்டுக்கை அவனை அப்படியே பிடித்து அவன் கைகளில் சங்கிலி விலங்கு போட்டுவிட்டனர். லோபோ திரும்பி பார்க்கும் போது அவனைப் போல் அநேகரை துப்பாக்கி வைத்திருந்த முரட்டு மனிதர்கள் பிடித்திருந்தனர். இவர்கள் அனைவரையும் அவர்கள் வந்திருந்த கப்பலில் ஏற்றினர். கப்பலும் கடலிலே பிரயாணமாக தொடங்கியது. அப்பொழுது லோபோ யோசித்தான். ஐயோ! இனி என் அப்பா அம்மாவை பார்க்க முடியாதே என்று யோசிக்கும்போது அவனுக்கு அழுகையாக வந்தது. லோபோ அழுவதைப் பார்த்த அந்த முரட்டு மனிதனில் ஒருவன் தனது சவுக்கினால் பளீரென்று லோபோவுக்கு ஒரு அடி கொடுத்தான். பயந்து போன லோபோ வாயை மூடிக்கொண்டு அழுகையை நிறுத்தினான். கடல் கடந்து கப்பல் அமெரிக்கா நாடு வந்து சேர்ந்தது.

அச்சமயம் அவனைப் பிடித்து வந்த முரட்டு மனிதன் லோபோவையும், அவனோடு பிடிக்கப்பட்டவர்களையும் அடிமைகளாக விற்க கடைத்தெருவுக்கு இழுத்துச் சென்றான். கடைத்தெருவில் அநேகர் வந்து பிடித்து வரப்பட்டவர்களை தங்களுக்கு அடிமைகளாக வாங்கிக்கொண்டு இழுத்துச் சென்றனர். இப்படி விற்கப்பட்ட அடிமைகள் கொண்டு போகப்படும் முன், அவர்கள் முதுகில் பழக்க வைத்த ஒரு கம்பியால் அடையாளச் சூடு போடுவர். வலியால் அடிமைகள் கத்தினால் வாயை மூட சொல்லி அடி விழும். இப்படி ஒவ்வொரு அடிமைகளும் விற்கப்படும் போது லோபோ தம்பி யோசிப்பான். என்னை யார் வாங்க போகின்றார்களோ? எப்படியெல்லாம் நான் கஷ்டப்பட வேண்டுமோ என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

இந்த சமயம், தானியேல் என்ற ஐயா, தனது மாத மளிகை சாமான்கள் வாங்க போகும்போது, அடிமைகள் விற்கின்ற கடையைத் தாண்டி செல்ல வேண்டியிருந்தது. இப்படி அவர் செல்லும்போது இந்த தானியேல் ஐயாவின் கண்கள் அவரை அறியாமல் லோபோவின் மேல் விழுந்தது. தானியேல் ஐயா இயேசுவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவராய் இருந்ததால், இயேசு அவரிடம் பேசினார் – தானியேல் இந்த சிறுவனை அந்த அடிமை கடையிலிருந்து வாங்கி விடுதலைச் செய் என்றார். உடனே தானியேல் ஐயா யோசித்தார். என் கையில் மாத செலவு வாங்க தான் பணம் இருக்கின்றது. இந்த அடிமை பையனை வாங்கிவிட்டால் பின்பு மாதத்தின் மளிகை செலவுக்கு எங்கே போவது என்று யோசித்தார். இச்சமயம் இயேசு மறுபடியும் அவரோடு பேசினார். உனக்கானதை வெறுத்து மற்றவர்களுக்கு உதவி செய் என்று. உடனே தானியேல் ஐயா மாத செலவுக்கு காசு இல்லாவிட்டாலும், இந்தப் பையனை வாங்கி விடுதலைச் செய்வேன் என்று உறுதிக்கொண்டார் (யோவான் 13:3).

தானியேல் ஐயா தன் கைகளிலிருந்த பணத்துடன் கடைக்கு சென்று லோபோவைக் காண்பித்து, இந்த பையனுக்கு எவ்வளவு சொல்றப்பா என்று கேட்டார். அந்த கடைக்காரன் 30 வெள்ளிக்காசு கொடுங்க என்றான். ஆனால் தானியேல் ஐயாவோ என்னிடம் 20 வெள்ளிக்காசு தான் இருக்கு, இஷ்டமானால் கொடு என்றார். அந்த கடைக்காரன் லோபோவை 20 வெள்ளிக்காசுக்கு விற்றான். பிறகு அடையாளமாக லோபோ முதுகில் சூடு போட பழுக்க காய்ச்சின கம்பியை எடுத்தான். உடனே தானியேல் ஐயா அவனைப் பார்த்து சூடு எல்லாம் போட வேண்டாம், மேலும் அவன் கை கால்களில் கட்டியுள்ள சங்கிலியை அவிழ்த்து விடு என்றார். உடனே கடைக்காரன் – ஐயா அவன் ஓடிவிட்டால் நான் பொறுப்பல்ல என்றான். சங்கிலி அவிழ்க்கப்பட்டது – சூடு போடப்படவில்லை – லோபோ எவ்வளவு நல்ல எஜமான் என்று யோசித்துக் கொண்டே அவரது சாந்தமான முகத்தை பார்த்தவாறே தானியேல் ஐயாவோடு நடந்துச் சென்றான். தானியேல் ஐயா லோபோவை அன்போடு நேசிக்கக் காரணம், அவரது இருதயம் தேவனின் அன்பினால் நிரப்பப்பட்டிருந்தது (ரோமர் 5:8). உனக்கொன்று தெரியுமா! இதே இயேசு உன்னையும் நேசிக்கின்றார்.

தானியேல் ஐயா வீடு வந்தவுடன் லோபோவுக்கு குளிக்க வசதி செய்துக் கொடுத்தார். லோபோ அதிக நாள் குளிக்காமலிருந்ததால் அவன் சோப்புப் போட்டு குளித்தபோது அவள் உடம்பிலிருந்து அழுக்கு திரண்டு வழிந்தோடியது. தம்பி / தங்கச்சி நமது உடம்பின் அழுக்கு சோப்பு போட்டு குளித்தவுடன் போய்விடும். ஆனால் உன் இருதய பாவ அழுக்கு சுத்தம் செய்யப்பட வேண்டுமானால், உனக்காக மரித்து உயிர்த்த இயேசுவின் இரத்தத்தால் மட்டுமே அது சுத்தம் செய்யப்பட முடியும்.

லோபோ குளித்து முடித்ததும் தானியேல் ஐயா கொடுத்த புது Shirt / Pantயைப் போட்டுக்கொண்டு வெளியே வந்தான். அதன் பிறகு லோபோவிற்கு நல்ல உணவு கொடுக்கப்பட்டது. லோபோ தானியேல் ஐயா வீட்டில் ஒரு வீட்டுப் பிள்ளையை போல் எந்த குறைவுமில்லாமல் வாழ்ந்து வந்தான். ஆனால் சில சமயம் தனது வீட்டாரை நினைத்து சோர்ந்துப் போவான். இதைக் கவனித்த தானியேல் ஐயா அப்பிரிக்கா செல்லும் கப்பலில் லோபோ தன் வீட்டிற்கு திரும்புவதற்கான பயணச்சீட்டை வாங்கி வந்து லோபோவிடம் கூறினார், லோபோ, நான் உனக்கு விடுதலைக் கொடுக்கப் போகிறேன். நீ உன் சொந்த இடம் திரும்ப டிக்கெட் வாங்கி வந்துள்ளேன் என்றார். உடனே லோபோ அவரைப் பார்த்துக் கேட்டான். ஐயா என்னை காசு கொடுத்து அடிமையாக வாங்கினீர்கள். இப்பொழுது விடுதலை செய்தால் உங்களுக்கு நஷ்டம் இல்லையா என்று கேட்டான். அப்பொழுது தானியேல் ஐயா சொன்னார், தம்பி நானும் உன்னைப்போல் ஓர் காலத்தில் அடிமையாகத்தான் இருந்தேன். எனக்கு ஒருவர் விடுதலைக் கொடுத்தார். அதன் நன்றி கடனாக நான் உனக்கு விடுதலைக் கொடுக்கிறேன் என்றார். உடனே லோபோ நீங்கள் யாருக்கு அடிமையாக இருந்தீர்கள் என்று கேட்ட போது – தானியேல் ஐயா சொன்னார், நான் பாவத்திற்கு அடிமையாக இருந்தேன் என்பதையும், எப்படி இயேசுவினால் விடுதலையும், இரட்சிப்பும் பெற்றுக் கொண்டேன் என்பதையும் விளக்கி சொன்னார். உடனே லோபோ எனக்கும் அந்த பாவத்தின் மேல் விடுதலை வேண்டும் என்று கேட்க, தானியேல் ஐயா சுவிசேஷத்தை அவனுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். லோபோவும் அன்று இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டான். வீடு திரும்பும் நாள் வந்தபோது லோபோ தானியேல் ஐயாவையும், அவரது மனைவியையும் பார்த்து, நான் இரண்டு விடுதலையோடு என் நாடு திரும்புகின்றேன். ஒன்று பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், இரண்டாவது உலக அடிமைத்தனத்திலிருந்தும் என்று சொன்னான்.

லோபோ தன் நாடு திரும்பியதும் அநேகருக்கு இயேசுவின் சுவிசேஷத்தை அவன் அறிவித்ததால், அநேகர் இயேசுவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டனர். இதனால் அவனுடைய கிராமம் முழுவதும் இயேசுவை ஏற்றுக்கொண்டது. இது நடக்கக் காரணம் தானியேல் ஐயாவும், அவரது மனைவியும் தங்களை முழுமையாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து, லோபோவுக்கு உதவி செய்ததால் தான்.

இயேசுவை ஏற்றுக் கொண்ட தம்பி! தங்கச்சி! நீ நல்லா கவனி, நீயும் உன்னை வெறுத்து மற்றவர்களுக்கு உதவி செய்யும்போது, நீயும் தேவன் உனக்கு தகுந்த காலத்தில் கொடுக்கும் பலனைக் காண்பாய்.

அதனால் தான் வேதம் கூறுகிறது: **"இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர்மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்." (மத்தேயு 10:42)**

லோபோ அன்று இயேசுவை ஏற்றுக்கொண்டு, மற்றவர்களுக்கும் சுவிசேஷத்தை அறிவித்தான். இன்று நீ இயேசுவை ஏற்றுக்கொண்டு அவரது ஊழியத்தை செய்ய வருவாயா? இந்திய தேசம் உன் கையில்.








அசீரியாவின் தலைநகர் - நினிவேக்கு விரோதமாக தேவனின் வாக்கை தீர்க்கதரிசனமாக உரைத்தவரின் பெயர் இந்த புத்தகத்திற்கு தலைப்பாக தரப்பட்டுள்ளது. நாகூம் என்பதற்கு ஆறுதல் அல்லது தேற்றுதல் என்று அர்த்தம். மேலும், இது நெகேமியா (யாவே என் ஆறுதல்) என்ற வார்த்தையின் சுருக்கம். ரோமர் 10:15இல் சொல்லியிருப்பது நாகூம் 1:15 என ஒரு சந்தேக குறிப்பு இருந்தாலும் நாகூம் புதிய ஏற்பாட்டில் எங்கும் மேற்கோளாக காட்டப்படவில்லை.

தீர்க்கதரிசிகள் தங்கள் சொந்த வாழ்க்கையைக் குறித்து எழுதுவது அவர்களுக்கு முக்கியமல்ல. அவர்களுடைய செய்தியே முக்கியத்துவம் பெறுகிறது. எனவே, தீர்க்கதரிசன வார்த்தைகளிலிருந்து அவர்கள் வாழ்க்கையினைப் பற்றித் தெரிந்து கொள்வது அரிது. நமக்கு தேவையான வாழ்க்கைக் குறிப்பினை நாம் வரலாற்று புத்தகங்களிலிருந்து தெரிந்துக் கொள்ளலாம். எல்கோசான் என்று 1:1 வசனத்தில் குறிப்பிட்டுள்ளதை தவிர இவரைப் பற்றி வேறு எந்த தகவலும் இல்லை; இந்த எல்கோஸ் அவரது பிறந்த இடம் அல்லது ஊழியம் செய்த இடத்தை குறிக்கிறது. எல்கோஸ் பட்டணம் இருக்கும் இடத்தை அறிய எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவும் தோல்வியிலேயே முடிந்தன. நாகூம் பிறந்த இடம் வடக்கு ஈராக் பகுதியிலுள்ள அல்குஸ், (அசீரியாவிற்கு கி.மு. 722இல் நாடுகடத்தப்பட்டவர்களின் வம்சவழி வந்தவராக நாகூம் இருக்கலாம்), கப்பர்நகூம் (நாகூமின் பட்டணம்) அல்லது யூதா தேசத்திற்கு தெற்கிலுள்ள ஓர் இடமாக இருக்கலாம் என அறியப்படுகிறது. அவருடைய பிறந்த இடம் அல்லது வாழ்ந்த இடம் - இவரது புத்தகத்திற்கு விளக்கம் அளிக்க எந்த விதத்திலும் முக்கியமானதாக இல்லை.

புத்தக அறிமுகத்தில் எந்தவொரு ராஜாவின் பெயரும் குறிப்பிடப்படவில்லை. ஆதலால் நாகூம் தீர்க்கதரிசனக் காலத்தை வரலாற்றுத் தரவுகளின் வழியாகவே அறிந்துகொள்ள முடியும். நியாயத்தீர்ப்பின் செய்தி நினிவே பட்டணத்திற்கு விரோதமாக வந்தபோது அத்தேசம் பலங்கொண்டிருந்தது, அது வீழ்ச்சியடைந்த கி.மு. 612க்கு முன் உள்ள நாட்கள். கி.மு. 626இல் அசூர்பனிபால் மரணம் சம்பவித்தது அதற்கும் முந்தைய நாட்கள் எனச் சுட்டிக்காட்டுகிறது. தேபாஸ் என்றும் அழைக்கப்பட்ட நோ அம்மோன் அசூர்பனிபாலின் கரங்களில் வீழ்ந்தது; அந்த நினைவுகள் பசுமையாக நாகூம் வசனம் 3:8-10இல் குறிப்பிட்டிருக்கிறபடியால், இச்சம்பவத்திற்கு 10 வருடங்களுக்கு பிற்பாடும் எழுப்புதல் ஏற்படாததால், இப்புத்தகத்தின் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டின் நடுப்பகுதி என்றும், மனாசே ராஜா அரசாண்ட காலம் எனவும் பரிந்துரைக்கப்படுகிறது (2ராஜா. 21:1-18).

யோனாவின் பிரசங்கத்தில் மனந்திரும்பிய நினிவே பட்டணம், 150 ஆண்டிற்குப்பின் விக்கிரகாராதனை, வன்முறை மற்றும் ஆணவத்திற்குத் திரும்பியது (3:1-4). எருசலேமில் சனகெரிப்பின் தோல்வியில் (கி.மு.701) இருந்து மீண்டு, அசீரியா அதன் பலத்தின் உச்சத்தில் இருந்தது (ஏசா.37:36-38). அசீரியாவின் எல்லை எகிப்து வரை பரவியிருந்தது. பல நூற்றாண்டுகளுக்கு முன் தீர்க்கதரிசனம் உரைத்த யோனா புத்தகத்தின் தொடர்ச்சியாக நாகூம் இருக்கிறது. நினிவேயை குறித்து தேவன் நிச்சயம் நிறைவேறும் என்று சொன்ன நியாயத்தீர்ப்பினை உரைக்கிறார், பின்நாட்களில் நாகூம் தேவனுடைய நியாயத்தீர்ப்பு நிறைவேறுவதை சித்தரிக்கிறார். நினிவேயின் சுவர்கள் 100 அடியும், 90 அடி ஆழமும், 150 அடி அளவிலான அகழிகளைக் கொண்டிருந்ததால் தான் அழிக்கப்படமுடியாத பட்டணம் என்று பெருமையைக் கொண்டிருந்தது. சர்வத்தையும் ஆளும் தேவன் அவருடைய பிரமாணங்களை மீறினவர்களை (1:8, 14; 3:5-7) பழி தீர்ப்பேன் என்று நிச்சயமாகச் சொல்கிறார். பொல்லாப்பினை நியாயம் தீர்க்கும் அதே தேவன் மீட்பவராக, தம்மிடத்தில் உண்மையுள்ளவர்களுக்கு அன்பினை பொழிபவராக இருக்கிறார் (1:7, 12, 13, 15; 2:2). நாகூமின் தீர்க்கதரிசன வார்த்தைகள் யூதர்கள் மற்றும் அசீரியருக்கு பயந்திருந்த யாவருக்கும் ஆறுதலைக் கொண்டுவந்தது.

நாகூம் 1:8இல் "புரண்டுவருகிற வெள்ளத்தினால் சங்காரம் பண்ணுவார்" என்கிறார். அப்படியே டைகிரிஸ் நதி சுவர்களை அழிக்கத்தக்கதான அளவிற்கு புரண்டோடியது. அதினால் பாபிலோனியர்கள் உட்பிரவேசித்தார்கள். பட்டணம் வெறிகொண்டு ஒளித்துக் கொள்வாய் என்று 3:11இல் முன்கூட்டியே நாகூம் அறிவித்தார். கி.மு. 612இல் நிர்மூலமான பிறகு, இந்த இடம் கி.பி. 1942இல் மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது. அசீரியர்களுக்கு விரோதமாக, அதன் தலைநகர் நினிவேயின் அக்கிரமம் மற்றும் விக்கிரகாராதனை மீறல்களுக்கு விரோதமாக வந்த தீர்க்கதரிசன அறிவிப்பு தான் இந்த நாகூம் தீர்க்கதரிசன புத்தகம்.

**முதலாம் அதிகாரத்தில் -** நினிவே அழிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது (Judge) - Who

இதில் தேவனின் வல்லமை மற்றும் மனிதனின் வன்மம் விளக்கப்படுகிறது

**இரண்டாம் அதிகாரத்தில் -** நினிவேயின் அழிவு விபரமாக சொல்லப்படுகிறது (Judgment) - How

இதில் பட்டணம் அழிக்கப்பட்டது மற்றும் பட்டணம் அவமதிக்கப்பட்டது

**மூன்றாம் அதிகாரத்தில் -** நினிவே அழிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை சொல்லப்படுகிறது (Justification) - Why இதில் மூன்று குற்றச்சாட்டுகள் உள்ளன.

இந்த நினிவே பட்டணத்தை குறித்த இரண்டு தீர்க்கதரிசனம் மற்றும் வரலாற்று குறிப்புகளை வேதாகமத்தில் நாம் ஒப்பிட்டு பார்த்தால் முதலாவது யோனா தீர்க்கதரிசிக்கு கடவுளுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மனமில்லை. ஆனால் ஜனங்கள் கீழ்ப்படிந்தார்கள். விளைவு தேவன் ஜனங்களை மன்னித்து, ஆசீர்வதித்தார். 150 ஆண்டுகள் கழித்து அதே பட்டணம் இன்று செல்வச் செழிப்போடு வணிகம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் முன்னேற்றம் கண்டுள்ளது. இதன் விளைவாக ஜனங்களிடையே பாவம், அக்கிரமம் பெருகியது. இப்பொழுது தீர்க்கதரிசி கடவுளுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிகிறார். ஆனால் ஜனங்களுக்கோ கடவுளுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய மனமில்லை, விளைவு அழிவு. முதலாவதாக தீர்க்கதரிசி தண்ணீரில் இருந்து காப்பாற்றப்படுகிறார். இப்பொழுது ஜனங்கள் தண்ணீரினாலே அழிக்கப்படுகிறார்கள்,

இந்த செய்தியை முடிக்கு முன் வரலாற்று நிகழ்வை ஞாபகப்படுத்தி முடிக்க ஆசைப்படுகிறேன். 150 ஆண்டுகளுக்கு முன்பதாக தென் தமிழகத்திலுள்ள சந்ததிக்கு கொள்ளை நோய்களும், வறுமையும் இருந்தது. ஜனங்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். வறண்ட நிலங்களிலும், கரடுமுரடான ரோடுகளிலும் முழங்கால்படியிட்டு, நண்பகல் வேளையிலும் தேவனை நோக்கி முறையிட்டார்கள். விளைவு காக்கப்பட்டார்கள் மற்றும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இவர்களை Baby Boomer சந்ததி என்கிறோம். இப்போது 150 ஆண்டுகள் கழித்து இந்த சந்ததியை ஜென் -Z என்கிறோம், நாம் கடவுளுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிக்கிறோமா, நமக்கு கடவுள் பயம் இருக்கிறதா என்று சிந்தித்துப் பார்ப்போம்.

# அடுத்த ஊருக்கு போவோம் வாருங்கள்!

## ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசம்
## ரியாசி மாவட்டம்
## ரியாசி பணித்தளம்

**அறிமுகம்:**

ஜம்மு காஷ்மீரில் உள்ள மாவட்டங்களில் ரியாசி மாவட்டம் ஒரு பிரபலமான புனித ஸ்தலமாக இந்துக்களால் கருதப்படுகிறது. ஏனென்றால் இது அந்த மாவட்டத்தில் கட்ரா என்ற ஊரிலுள்ள ஸ்ரீவைஷ்னோ மாதா தேவி கோயிலாகும். இங்கு மிகப்பெரிய மலைகள், அணை மற்றும் சிறு சிறு கோயில்கள் என பார்ப்பதற்கு மிகவும் அழகான ஒரு இடமாகும். ஆனால் இங்குள்ள மலைகள் பெரும்பாலும் மண் மற்றும் கற்களால் நிறைந்ததாகும். ஆதலால் மழை பெய்தால் நிலச்சரிவு ஏற்படும் அபாயம் இங்கு மிக அதிகம். கடந்த 2024ஆம் ஆண்டு இந்த ரியாசி பணித்தளமானது மீண்டும் துவங்கப்பட்டது. கடினமான இடத்தில் கூட நமது ஆண்டவர் மிஷனெரிகளின் மூலம் அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து வருகிறார். அநேக ஆத்துமாக்கள் இயேசுவை அறிய திறந்த வாசலை ஏற்படுத்தியிருக்கிறார். ஆண்டவருக்கே மகிமை உண்டாவதாக.

**ரியாசி பணித்தள மக்களின் மத நம்பிக்கை:**

இங்குள்ள மக்கள் பாபா மற்றும் குரு என மனிதர்களைத் தெய்வமாக வழிபடுகின்றனர். ஒவ்வொரு கோயிலுக்கு பின்னாலும், ஒவ்வொரு குருவிற்கு பின்னாலும் ஒரு கதையை உண்மையாய் சித்தரித்து மக்களை அடிமையாய் வைத்திருப்பதை இந்த ரியாசி மாவட்டத்தில் அதிகம் பார்க்கலாம். ஸ்ரீ வைஷ்ணவி மாதா தேவி கோயிலைப் பார்ப்பதற்கும், வழிபடுவதற்கும், தரிசிப்பதற்கும் அநேகர் தங்கள் பணத்தையும், நேரத்தையும், பலத்தையும் செலவழிக்கின்றனர். இயேசுவை அறியாத மக்கள் இங்கு மிக அதிகம். இயேசுவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஞானஸ்தானம் பெறுவது இவர்களிடையே மிக மிக சவாலான காரியமாக உள்ளது. வேறு மதத்தைச் சேர்ந்த நாம் கிறிஸ்தவத்தை பின்பற்றினால், நம் குடும்பத்திற்கு சாபம் வந்துவிடுமோ என பலர் அஞ்சுகின்றனர்.

**ரியாசியில் காணப்படும் இன மக்கள்:**

இங்கு குஜர், வால்மீகி, மஹாசா, பகத், சமியார் இன மக்கள் அதிகம் வசிக்கின்றனர். குஜர் இன மக்கள் பெரும்பாலும் முஸ்லீம் மதத்தை பின்பற்றுகிறவர்கள். வால்மீகி இன மக்கள் சமுதாயத்தில் கீழ் ஜாதி மக்களாக கருதப்படுகின்றனர். இவர்கள் தூய்மைப் பணிக்கு மட்டுமே பயன்படுத்தப்படுபவர்கள். இவர்களில் பலர் இயேசுவை அறிந்தவர்கள். ஆனால் ஞானஸ்நானம் பெறாதவர்கள். இவர்களிடம் காணப்படும் சாட்சி இல்லாத வாழ்க்கை, மற்ற இனமக்கள் மத்தியில் கிறிஸ்துவைப் பற்றியும், கிறிஸ்தவ மதத்தைப் பற்றியும் தவறான ஒரு எண்ணத்தை உருவாக்கி விட்டது. கிறிஸ்துவைப் பின்பற்றினால் நாமும் அவர்களினமாக மற்றவர்களால் நாம் மதிக்கப்படுவோமோ என அஞ்சுகின்றனர்.

**ஜெபிப்போம்:**

- இந்த ரியாசி பணித்தள மக்களை தேவன் சாத்தானின் கட்டுகளிலிருந்தும், ஆளுகையிலிருந்தும், அந்தகார பிடியிலிருந்தும் விடுவிக்கும்படியாய் ஜெபிப்போம்.
- பக்தி உள்ளவனை தேவன் தமக்காக தெரிந்து கொண்டார் என்ற வேத வாக்கியத்தின்படி இந்த மக்கள் மெய்யான தேவனை அறிந்து அவரை பின்பற்ற ஜெபிப்போம்.
- குருக்களை வழிபடும் மக்கள் சத்திய குருவாகிய இயேசுவை அறிந்துக்கொள்ளவும், மக்களின் மன கண்கள் திறக்கப்படவும், குருக்களை தேவன் இரட்சிக்கவும் ஜெபிப்போம்.
- இங்குள்ள அனைவர் வீட்டிலும் குல தெய்வக் கோயில்களைக் கட்டியுள்ளனர். அவற்றை வழிபட்டதால் இயேசுவை தெய்வமாக வணங்க அவர்களால் முடியவில்லை. தேவன் தாமே அவர்கள் குலதெய்வமாய் மாற ஜெபிப்போம்.
- ரியாசிப் பணித்தளத்தில் தேவனுடைய ஊழியத்தை செய்து வருகிற மிஷனெரிக் குடும்பத்திற்காக, தேவன் தாமே இவர்களைக் கொண்டு மிகப்பெரிய ஆத்தும அறுவடைச் செய்ய ஜெபிப்போம்.



Mrs. Emi Bhagya





# பிரான்ஸ்





பிரான்ஸ், தனது வளமான வரலாறு மற்றும் கலாச்சாரத்திற்காக அறியப்பட்ட ஒரு மேற்கு ஐரோப்பிய நாடாகும். இது ஈபிள் கோபுரம் (Eiffel Tower) மற்றும் லூவர் அருங்காட்சியகம் (Louvre Museum) போன்ற முக்கிய இடங்களுக்காகப் புகழ் பெற்றது. ஐரோப்பிய அரசியல் மற்றும் உலகளாவிய கலாச்சாரத்தை வடிவமைப்பதில் பிரான்ஸ் ஒரு முக்கியப் பங்காற்றியுள்ளது.

**தலைநகரம்** : பாரிஸ்
**நாணயம்** : யூரோ (EUR)
**மொழிகள்** : பிரெஞ்சு
**அரசியல் அமைப்பு:** ஜனாதிபதி குடியரசு
**மக்கள் தொகை** : 68 மில்லியன்

## மத கண்ணோட்டம்:

- மக்கள்தொகையில் சுமார் 55-60% பேர் தங்களைக் கிறிஸ்தவர்கள் என அடையாளப்படுத்திக் கொள்கின்றனர் (இதில் பெரும்பாலானோர் கத்தோலிக்கர்களாகவும், ஒரு சிறிய குழுவினர் புராட்டஸ்டன்ட்டுகளாகவும் உள்ளனர்).
- மதச்சார்பற்றவர்கள் என தங்களை அடையாளப்படுத்திக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது (சுமார் 25-30%).
- கத்தோலிக்க மதத்திற்கு ஆழமான வரலாற்று வேர்கள் உள்ளன, ஆனால் சமீபத்திய ஆண்டுகளில், குறிப்பாக இளைஞர்கள் மத்தியில், தேவாலய வருகைக் குறைந்துள்ளது.
- இந்த மாதத்தில் இளைஞர்களுக்காக "Jesus Festival" என்றழைக்கப்படும் ஒரு சிறப்பு இசை மற்றும் பாடல் விழா நடைபெறுகிறது. இது பிரான்சில் மிக வேகமாக வளர்ந்து வரும் நவீன கால கிறிஸ்தவ இசை விழாக்களில் ஒன்றாகும். ஆயிரக்கணக்கான இளம் இளைஞர்களை ஈர்க்கும் இந்த விழாவில், தலைசிறந்த கிறிஸ்தவக் கலைஞர்களின் நேரடி நிகழ்ச்சிகள், படைப்பாற்றல் பயிலரங்குகள் (creative workshops), குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கான விளையாட்டுகள் மற்றும் செயல்பாடுகள் இடம்பெறுகின்றன. இந்த ஆண்டு 7500 இளைஞர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது (கடந்த ஆண்டு 6100 பேர் கலந்துகொண்டனர்).

## பிரான்சிலுள்ள இளைஞர்கள் மற்றும் குழந்தைகள் குறித்த ஜெபக்குறிப்புகள்:

- "Jesus Festival"லில் கலந்துகொள்ளும் 7,500 இளைஞர்கள், ஆராதனை மற்றும் ஐக்கியத்தின் மூலம் இயேசுவைச் சந்திக்கவும், இருதயத்தில் மறுரூபமாக்கப்படவும், உலக ஆசைகளிலிருந்து விலகி, கிறிஸ்துவுக்குள் இரட்சிப்பைத் தழுவிக்கொண்டு, பிரான்ஸ் முழுவதும் கிறிஸ்துவுக்காக ஒளியாய்ப் பிரகாசிக்கும் ஒரு துணிச்சலான தலைமுறையாகத் திகழவும் நாம் ஜெபிப்போம்.
- அநேக கிறிஸ்தவக் குடும்பங்களும், திருச்சபைகளும், ஊழியங்களும் - இளைஞர்களையும் பிள்ளைகளையும் உண்மையுடன் வழிநடத்த வேண்டும் என்றும், அதன்மூலம் அவர்கள் விசுவாசத்தில் பலப்பட்டு, தங்கள் பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் சமூகங்களில் நற்செய்திக்குத் துணிச்சலான சாட்சிகளாக மாற வேண்டும் என்றும் ஜெபிப்போம்.
- குழந்தைகள் மீதான பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டுகள் கொண்ட ஒருவரால் கடத்தப்பட்டு கொல்லப்பட்ட 11 வயது சிறுமி லிஹானாவின் துயர மரணத்தைத் தொடர்ந்து, பிரான்ஸ் தற்போது நாடு தழுவிய போராட்டங்களைச் சந்தித்து வருகிறது. 2026 மே 29 அன்று காணாமல் போன சிறுமியின் உடல், ஜூன் 4, 2026 அன்று கொலை செய்யப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டது. குழந்தைகள் பாதுகாப்பிலுள்ள அமைப்பு ரீதியான தோல்விகள் மற்றும் பாலியல் வன்முறை வழக்குகளை நீதித்துறை கையாள்வதிலுள்ள குறைபாடுகள் குறித்து பொதுமக்களிடையே சீற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 160க்கும் மேற்பட்ட நகரங்களிலுள்ள குடிமக்கள் நீதி மற்றும் அவசர சீர்திருத்தங்களைக் கோரி வருகின்றனர். குழந்தைகளைப் பாதுகாக்கும் சீர்திருத்தங்களுக்காகவும், பாதிக்கப்பட்டவர்கள் குணமடைவதற்காகவும் நாம் ஜெபிப்போம்.
- பிரான்ஸ் நாட்டில் கஞ்சா, கோகோயின், ஹெராயின் மற்றும் MDMA ஆகியவற்றின் பயன்பாடு அதிக அளவில் நிலவுவதோடு, புதிய செயற்கை போதைப்பொருட்களும் உருவாகி வருகின்றன. போதைப்பொருள் பழக்கத்திலிருந்து இளைஞர்கள் விடுதலை பெறவும், ஏராளமான மறுவாழ்வுத் திட்டங்கள் தொடங்கப்படவும் நாம் ஜெபிப்போம்.
- இளைஞர் வேலையின்மை விகிதாசார அடிப்படையில் அதிகமாகவே உள்ளது, மேலும் பலர் தொழிலாளர் சந்தையில் நுழைவதற்குப் போராடுகின்றனர். 2025இல் 7.5%ஆக இருந்த வேலையின்மை விகிதம், 2026இல் 8.3%ஆக உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய தொழிற்துறைகளும், வணிகங்களும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான கதவுகளைத் திறக்க வேண்டும் என்று தொடர்ந்து ஜெபிப்போம்.



# பணித்தள ஆலயக் கட்டுமான பணிகளுக்கான
## துதி, ஜெபக்குறிப்புகள்

**துதிக்க:**

✦ நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மூலம் இதுவரை கட்டப்பட்டுள்ள சுமார் 1725க்கும் அதிகமான ஆலயங்களுக்காக தேவனைத் துதிப்போம்.

✦ பணித்தளங்களில் ஆலயங்களைக் கட்டுவதற்கு ஜெபத்தோடு காணிக்கைகளைக் கொடுத்த அனைத்து ஆதரவாளர்களுக்காகவும் தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:**

✦ ஆராதனைகள் நடைபெற்று வரும் பணித்தளக் கிராமங்களில் ஆலயம் கட்ட தேவையான நிலங்கள் கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

✦ கிராமங்களில் ஆலயம் கட்ட தேவையான அரசு அனுமதிகள் தடையின்றி கிடைக்கப்பெற ஜெபிப்போம்.

✦ ஆலயக் கட்டுமானப் பணிக்கான நன்கொடைகள் தடையின்றி கிடைக்கவும், முறையாக அவைகள் கட்டுமானப் பணிக்கென செலவழிக்கப்படவும் ஜெபிப்போம்.

✦ ஆலயக் கட்டுமானப் பணியில் ஈடுபடும் பொறியாளர்கள், கொத்தனார்கள், பிற வேலையாட்கள் மற்றும் நமது ஊழியர்களுக்குத் தேவன் தமது விசேஷித்த ஆலோசனைகளைத் தர ஜெபிப்போம்.

✦ ஆலயக் கட்டுமானப் பணியின் போது எவ்வித அசம்பாவிதங்களோ, விபத்துக்களோ, பொருள் சேதங்கள் மற்றும் இழப்புகளோ வராமல் தேவன் பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம்.

✦ ஆலயக் கட்டுமானப் பணியில் உள்ளூர் சபை விசுவாசிகள் அனைவரும் வாஞ்சையோடு பங்கெடுத்து உதவிகளைச் செய்ய ஜெபிப்போம்.

✦ இதுவரை கட்டப்பட்டுள்ள மற்றும் வரும் காலங்களில் கட்டப்படவுள்ள அனைத்து ஆலயங்களிலும் குடிநீர் வசதி, சுற்றுச்சுவர், கழிவறை மற்றும் ஊழியர் தங்கும் அறை கட்டப்பட ஜெபிப்போம்.

✦ பணித்தள ஆலயங்களைச் சபை விசுவாசிகள் மற்றும் மூப்பர்கள் கிரமமாக பராமரிக்கவும், பாதுகாக்கவும் ஜெபிப்போம்.

✦ பொய் வழக்குகளினாலும், கடும் உபத்திரவம் மற்றும் பல்வேறு காரணங்களினாலும் மூடப்பட்டுள்ள சில பணித்தள ஆலயங்கள், உடனடியாக திறக்கப்பட்டு ஆராதனைகள் தொடர்ந்து நடைபெற ஜெபிப்போம்.

✦ பல்வேறு மாநிலங்களில் நமது ஆலயங்கள் மற்றும் ஆலய நிலங்களுக்கு எதிராக போடப்பட்டுள்ள பொய் வழக்குகள் ரத்து செய்யப்பட ஜெபிப்போம்.

✦ பணித்தளங்களில் ஆராதனைக் குழுக்கள் நடைபெறும் அனைத்து கிராமங்களிலும் ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

✦ இந்திய கிராமங்கள் அனைத்திலும் சபைகள் எழும்ப, ஆலயங்கள் கட்டப்பட ஜெபிப்போம்.

✦ ஆலயம் கட்டும்படியாக நிலம் மற்றும் நன்கொடைகளை உதாரத்துவமாய் அளித்துவரும் நமது விசுவாசிகள் மற்றும் ஆதரவாளர்களைத் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

✦ ஆலயக் கட்டுமானப் பணிகளை ஒருங்கிணைக்கும் இப்பிரிவின் கன்வீனர், செயலர், கமிட்டி அங்கத்தினர்கள், பொறியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கு தேவன்தாமே ஞானத்தையும், வழிநடத்துதலையும், ஒத்தாசையையும் தர ஜெபிப்போம்.





PRAYER POINTS - FMPB - MINISTYRY

Rev. Daniel David

Dr. Godwin & Dr. Azubha






**என்ன?**

விளையாட்டுக் காயம் என்பது விளையாட்டு அல்லது உடற்பயிற்சியின் போது ஏற்படும் உடல்ரீதியான பாதிப்பாகும். இது தசைகள் (சுளுக்குகள்/தசைப்பிடிப்புகள்), எலும்புகள் (எலும்பு முறிவுகள்), தசைநார்கள் (ligaments - சுளுக்குகள்), தசைநாண்கள் (tendons) அல்லது மூட்டு விலகுதல் போன்ற பாதிப்புகளாகும். இது லேசான அசௌகரியம் முதல் கடுமையான பாதிப்பு வரை இருக்கலாம்.

**ஏன்?**

போதிய பயிற்சி இல்லாமை, தவறான நுட்பம், அதிகப்படியான பயன்பாடு, உடற்தகுதி குறைபாடு, பாதுகாப்பற்ற சூழல், விபத்துக்கள் அல்லது சோர்வு ஆகியவற்றின் காரணமாகவே விளையாட்டு காயங்கள் பெரும்பாலும் ஏற்படுகின்றன. இந்த காரணிகள் உடலின் மீதான அழுத்தத்தை அதிகரித்து, ஒருங்கிணைப்பைக் குறைக்கின்றன, இதனால் உடற்பயிற்சியின் போது காயங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகின்றன.

**எப்படி?**

விளையாட்டுக் காயங்கள் இரண்டு முக்கிய வழிகளில் ஏற்படலாம்:

**1. தீவிர காயங்கள் (Acute Injuries):** இவை விளையாடும் போது திடீரென ஏற்படுகின்றன.

எ.கா.: ஓடும்போது கணுக்கால் பிசகுதல், கீழே விழுந்து எலும்பு முறிதல் அல்லது மற்றொரு வீரர் மீது மோதுதல்.

**2. நாள்பட்ட/அதிகப்படியான பயன்பாட்டு காயங்கள் (Chronic/Overuse Injuries):** உடலின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தொடர்ச்சியாக ஏற்படும் அழுத்தம் காரணமாக இவை படிப்படியாக உருவாகின்றன.

எ.கா.: ஓட்டப்பயிற்சி முழங்கால் வலி (Runner's knee), டென்னிஸ் முழங்கை வலி (Tennis elbow) மற்றும் ஷின் ஸ்பிளிண்ட்ஸ் (Shin splints – கணுக்கால் / கெண்டைக்கால் வலி).

**இதற்கு சிகிச்சை உள்ளதா?**

விளையாட்டுக் காயங்களுக்கு பொதுவாக சிகிச்சை அளிக்க முடியும். சரியான சிகிச்சை மற்றும் மறுவாழ்வுப் பயிற்சிகள் (Rehabilitation) மூலம், பல விளையாட்டு வீரர்கள் முழுமையாக குணமடைந்து மீண்டும் விளையாட்டிற்குத் திரும்புகிறார்கள். சரியான பயிற்சி நுட்பங்களைப் பின்பற்றுவது, வார்ம்-அப் (Warming up) செய்வது மற்றும் சரியான உபகரணங்களைப் பயன்படுத்துவது ஆகியவை எதிர்கால காயங்களைத் தடுக்க உதவும்.

**புள்ளிவிவரங்கள்:**

✦ உத்திரப் பிரதேசத்தில் 400 விளையாட்டு வீரர்களிடம் 2025ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஆய்வில், ஒட்டுமொத்த விளையாட்டு காயங்களின் பரவல் 48.5%ஆக இருந்தது கண்டறியப்பட்டது.

✦ மிக உயர்ந்த காய விகிதங்கள் பதிவான விளையாட்டுகள்: கால்பந்து (Football) - 64% மற்றும் மல்யுத்தம் (Wrestling) - 58%.

✦ பெண் விளையாட்டு வீரர்களைக் காட்டிலும் (45.2%), ஆண் விளையாட்டு வீரர்கள் சற்று அதிக காய விகிதத்தை (50.6%) கொண்டுள்ளனர்.

✦ போட்டிகளின் போது ஏற்படுவதை விட, பயிற்சிப் போட்டிகளின் (Training Sessions) போதே காயங்கள் அடிக்கடி ஏற்பட்டுள்ளன.

✦ தற்போதைய ஆராய்ச்சியின்படி, தோராயமாக 40-50% இந்திய விளையாட்டு வீரர்கள் விளையாட்டு தொடர்பான காயங்களை எதிர்கொள்கின்றனர். இதில் கால்பந்து, மல்யுத்தம் மற்றும் கிரிக்கெட் ஆகிய விளையாட்டுகள் குறிப்பாக அதிக காயப் பாதிப்பைக் கொண்டுள்ளன.

**"நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை குணமாக்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்." - எரேமியா 30:17**

**ஜெபக்குறிப்புகள்:**

1. காயம் அடைந்த ஒவ்வொரு தசை, எலும்பு, தசைநார் (ligament) மற்றும் மூட்டுகளுக்கு முழுமையான சுகத்தையும், பலத்தையும் கர்த்தர் கட்டளையிட ஜெபிப்போம்.
2. காயமடைந்த விளையாட்டு வீரர்கள் குணமடையவும், இந்த காலப்பகுதியில் பொறுமையையும், தைரியத்தையும், சகிப்புத்தன்மையையும் கர்த்தர் இவர்களுக்கு அருளவும் ஜெபிப்போம்.
3. இவர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள், பிசியோதெரபிஸ்ட்டுகள், பயிற்சியாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கு கர்த்தர் சிறந்த ஞானத்தையும், பொறுமையையும் கொடுக்க ஜெபிப்போம்.
4. காயமடைந்த விளையாட்டு வீரர்கள் முழுமையாகக் குணமடைந்து, தங்களது விளையாட்டு, படிப்பு, வேலை மற்றும் அன்றாட நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பாகத் திரும்ப ஜெபிப்போம்.
5. விளையாட்டு வீரர்களை எதிர்காலக் காயங்களிலிருந்து கர்த்தர் பாதுகாக்கவும், இவர்கள் ஆரோக்கியமான பழக்க வழக்கங்களையும், சரியான பயிற்சி முறைகளையும் வளர்த்துக்கொள்ளவும் ஜெபிப்போம்.

விடியலுக்குக் காத்திருந்த மக்களுக்கு விடியலைக் கொடுத்த அருட்பணியாளர்

# ஓர் இனிய உரையாடல்

## அருட்திரு. எஸ். தேவதாஸ்



**அருட்பணியாளரின் அறிமுகம்:** என்னுடைய பெயர் எஸ். தேவதாஸ், 1980ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக் குழுவில் முழு நேர ஊழியனாக இணைந்தேன். 1981ஆம் ஆண்டு பீகாருக்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டேன்.

**கேள்வி: உங்கள் வாழ்க்கையில் திருப்புமுனை எப்போது ஏற்பட்டது?**

**அருட்பணியாளரின் பதில்:** என்னுடைய இரட்சிப்பின் வாழ்விற்கு வித்திட்டவர் ஜான் முத்துசாமி என்ற ஒரு தேவ ஊழியர். பி.யு.சி படிக்கும்போது செல்லதுரை என்ற மூத்த அண்ணன் மூலம் மாநில முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவைப் பற்றி அறிந்துகொண்டேன். அங்கே கொடுக்கப்பட்ட செய்திகள் மற்றும் வட இந்தியாவிலிருந்து வந்த மிஷனெரிகளின் அறைகூவல் என்னை வட இந்தியாவின் ஊழியத்திற்காக திருப்பி விட்டன. 1981ஆம் ஆண்டு நடைபெற்ற மாநில முகாமில் வட இந்தியா ஊழியத்திற்காக என்னை ஒப்புக்கொடுத்தேன்.

**கேள்வி: மனமாற்றத்திற்குப் பிறகு நீங்கள் சந்தித்த சவால்கள் எவை?**

**அருட்பணியாளரின் பதில்:** என் நண்பர்களுக்கு என்னுடைய மனமாற்றம் பிடிக்காத ஒன்றாயிருந்தது. எனவே அவர்கள் என்னை பகவான் என்று கேலி செய்து அழைக்க ஆரம்பித்ததோடு, மிகவும் இழிவாகவும் பார்க்க ஆரம்பித்தனர். நான் எதையும் பொருட்படுத்தாமல் அண்ணனோடு சேர்ந்து ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். இது அநேக சவால்களின் மத்தியில் எனக்கு தேவ பலனாக இருந்தது.

**கேள்வி: கலாச்சாரம் கடந்து சென்று நற்செய்தி பணி செய்ய வேண்டும் என்ற தாகம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?**

**அருட்பணியாளரின் பதில்:** நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பாடல்கள் என் இருதயத்தைக் தொடக்கூடியதாயிருந்து. ”மந்தையில் சேரா ஆடுகளே” “உள்ளத்தில் அவர்பால் பேரன்புள்ளோரெல்லாம்” இப்படிப்பட்ட பாடல்கள் என்னை மிஷனெரி ஊழியத்திற்கு மிகவும் பாரப்படுத்தின. அது மாத்திரமல்ல, வட இந்தியாவிலிருந்து வந்த தேவ ஊழியர்கள், அங்குள்ள காரியங்களைப் பகிர்ந்துகொள்ளும் பொழுது மிகவும் நொறுக்கப்பட்டவனாக, இந்த ஊழியத்திற்கு என்னை ஒப்புக்கொடுத்து, ஆண்டவரே! நான் உயிரோடிருக்கும் நாளவும் உம்முடைய ஊழியத்தை செய்வேன் என்று என்னை முழுமையாக அர்ப்பணித்தேன்.

**கேள்வி: ஊழியத்திற்கு வந்த பிறகு களத்தில் நீங்கள் சந்தித்த பாடுகள், போராட்டங்கள் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** என்னுடைய 22வது வயதில் வட இந்தியாவிலுள்ள பீகாருக்குச் சென்றேன். ஆனால் அங்கிருந்த சூழ்நிலைகள், மக்களின் மனநிலைகள், எதிர்ப்புகள் போன்றவை என்னை சில நாட்களுக்குள் மிகவும் கலங்க வைத்தன. என்னோடு உடன் ஊழியராக பணி செய்வதற்கு ஊழியர்கள் குறைவாயிருந்த காரணத்தினால் நான் தனிமையாகவே இந்த ஊழியத்தை ஜெபத்தோடு செய்ய ஆரம்பித்தேன். திருமணம் ஆகாதவர்களுக்கு வீடு கிடைப்பது அங்கு மிகவும் கடினமாயிருந்தது. அப்படிப்பட்ட சூழ்நிலையிலும், தொடர்ந்து ஊழியத்தைச் செய்ய தேவன் கிருபைத் தந்தார். பிறகு 1993ஆம் ஆண்டு என் மனைவிக்கு ஏற்பட்ட சுகவீனத்தினால் தமிழகத்திற்குத் திரும்பி வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆனால் என் மனைவி, தயவு செய்து என்னை இங்கேயே விட்டுவிடுங்கள் நான் பீகாரிலேயே மரிப்பேன் என்றாள். தேவன் அந்த வார்த்தையைக் கனப்படுத்தி வியாதியிலிருந்து பூரண விடுதலையைக் கொடுத்தார்

**கேள்வி: விலை கிரையம் செலுத்தினதினால் மக்கள் மத்தியில் ஏற்பட்ட விளைவுகள் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** தேவன் ஆத்துமாக்களைக் கொள்ளைப் பொருளாக கொடுத்ததோடு, ஊழியர்கள் அநேகரைக் கொடுத்தார். ஆதலால் நாங்கள் அனைவரும் சேர்ந்து மூன்று ஆலயங்களைக் கட்டவும், நூற்றுக்கணக்கான மக்களுக்கு திருமுழுக்கு கொடுக்கவும் தேவன் உதவிச் செய்தார். அதனுடைய விளைவாக இன்று அநேக தேவ ஊழியர்கள் அந்த மாவட்டத்திலிருந்து எழும்பி இருக்கிறார்கள்.

**கேள்வி: உன்னதரின் ஆணைக்குக் கீழ்படிந்ததினால் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்கள் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** கர்த்தரின் கிருபையால் இங்கு அற்புதங்கள் நடைபெற ஆரம்பித்தன. மக்கள் கர்த்தரை விசுவாசித்து, திருமுழுக்குப் பெற்றனர். மேலும் ஆலயங்கள் கட்டப்பட்டன. அந்த இடத்தில் தேவன் எங்களை அதிகமாக பயன்படுத்தினதின் விளைவாக அங்குள்ள மக்கள் ஆசீர்வதிக்கப்பட்டனர்.

**கேள்வி: நீங்கள் பணி செய்த இடத்தில் சந்திக்கப்படாத மக்களைக் குறித்து உங்கள் இருதயத்தின் பாரம் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** வட இந்தியாவில் சுவிசேஷம் அறிவிக்க அநேக தடைகளுண்டு. ஆனால் கூட்டங்கூட்டமாக வட இந்தியர்கள், தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு நாம் சுவிசேஷத்தை அறிவித்தால், இவர்கள் மூலம் அவர்களுடைய சொந்த இடத்தில் சுவிசேஷம் இலவசமாக சென்றுவிடும். எனவே நாங்கள் இன்றும் அதே ஊழியத்தைத் தொடர்ந்து சென்னையில் செய்துக் கொண்டிருக்கிறோம். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் திருவசனத்தை ஜாக்கிரதையாய்ப் போதிக்க வேண்டும் என்ற தேவனுடைய வார்த்தையைக் கைக்கொண்டு வருகிறோம்.

**கேள்வி: கேரீத் வாசகர்களுக்கு நீங்கள் கூற விரும்பும் ஆலோசனைகள் என்ன?**

**அருட்பணியாளரின் பதில்:** நாம் இன்னும் எத்தனை நாட்கள் பூமியில் வாழ்வோம் என்று நமக்கு தெரியாது. ஆகவே உங்கள் வாலிப வயதில் கிடைக்கும் அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி, கிறிஸ்துவின் சுவிசேஷ ஊழியத்தை தரிசனத்தோடு செய்ய முன் வாருங்கள். தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக. ஆமென்!

“ஒரே ஒரு வாழ்க்கை அது சீக்கிரமாய்க் கடந்து செல்லும், கிறிஸ்துவுக்காக வாழ்வது மாத்திரமே நிலைத்து நிற்கும்”.

**ஜெபக்குறிப்புகள்:**

✦ சென்னையில் வாழும் அனைத்து வட இந்திய மக்களும் இயேசுவை ஏற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

✦ இயேசுவை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் அவர்கள் வசிக்கும் இடங்களில் சாட்சியாக வாழவும், மற்றவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவும் ஜெபிப்போம்.

# SCREEN GAMBLING




அன்பு தம்பி! தங்கைகளே! இந்த மாதம் நாம், ஸ்கிரீன் கேம்பிளிங் (Screen gambling)க்காக ஜெபிப்போம். சமூக வலைதளங்களில் விளையாடப்படும் விளையாட்டுகள் சிலவற்றில் நாம் பணம் வெல்லலாம்! இவற்றுக்காக நாம் முதலில், நம் பணத்தில் பந்தயம் கட்ட வேண்டும். அதில் வெற்றி பெற்றால் பரிசாக பணம் நமக்கும், அதில் தோல்வியுற்றால், நாம் பணத்தை இழப்பவர்களாகவும் காணப்படுவோம். இவ்வாறு, விளையாடப்படும் வழிமுறைகளைத்தான் நாம் ஸ்கிரீன் கேம்பிளிங் என்கிறோம். இது மட்டும் அல்லாமல், சில விளையாட்டுகளை தொடர்ந்து விளையாட, நாம் பணங்களை அந்தந்த விளையாட்டுகளின் செயலிகளில் கட்ட வேண்டும். அண்டை நாடுகளில் கெசினோ போன்ற விளையாட்டுகள் இந்த ஸ்கிரீன் கேம்பிளிங்கின் மூலதனமாக செயல்படுகிறது. அதைத் தழுவி இந்நாட்களில் பல சூதாட்டம் மற்றும் விளையாட்டு செயலிகள் வந்து விட்டன. இப்படியாக, இது ஒரு அடிமைத்தனமாகவே இளம் வாலிபர்களிலிருந்து, பெரியவர்கள் வரை காணப்படுகிறது. கிரிப்டோ சூதாட்டம், லோட் பாக்ஸ் செயலி போன்றவை இளைஞர்களை அதிகமாக ஈர்க்கும் ஆன்லைன் சூதாட்ட செயலிகளாகத் திகழ்கின்றன. இதனால் பல வாலிபர்கள் தங்கள் பெற்றோர்களிடம் பொய் சொல்லவும், அவர்களிடமிருந்து பணத்தைத் திருடும் திருடர்களாகவும் மாறி விடுகின்றனர். மேலும் சிலர் பணத் தேவைகளுக்காக நண்பர்களிடம் உதவியாக கேட்க சென்று, பின்னர் கைக்கலப்புகளில் முடிகிறது, கடன் மேல் கடன், வட்டி மேல் வட்டி என்ற நிலைக்கு வாலிபர்கள் தள்ளப்படுகின்றனர். இன்னும் சிலர், தங்கள் பண இழப்பைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், தற்கொலைச் செய்துக்கொள்கின்றனர். இன்றைக்கு இதனால் பல குடும்பங்கள், தகப்பன் இல்லாமல், தாயில்லாமல் காணப்படுகிறது.

**துதிக் குறிப்புகள்:**

- ✦ தமிழக அரசு ஆன்லைன் சூதாட்டத்திற்கு தடைவிதித்து உத்தரவிட்டது செல்லும் என்று உயர் நீதிமன்றம் கொடுத்த தீர்ப்புக்காக தேவனைத் துதிப்போம்.
- ✦ 37 இணையச் சேவை வல்லுநர்கள், உள்நாட்டு பாதுகாப்புப் பிரிவு ஆகியோரது உதவியுடன் சூதாட்ட பணபரிவர்த்தனைகளைக் கண்காணிக்க அரசு ஒழுங்கு செய்துள்ளதால் தேவனைத் துதிப்போம்.
- ✦ நம் தேசத்தில், 8500க்கும் மேற்பட்ட சூதாட்ட செயலிகள், இணையதளங்களை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் தேவனைத் துதிப்போம்.

**ஜெபக் குறிப்புகள்:**

- ✦ ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடுபவர்களில் சுமார் 80% பேர் ஸ்மார்ட்போன்களைப் பயன்படுத்துகின்றனர். இவ்வாறு ஸ்மார்ட் ஃபோன்களை சூதாட்டத்திற்குப் பயன்படுத்துகிறவர்களின் இரட்சிப்புக்காக ஜெபிப்போம்.
- ✦ 2025ஆம் ஆண்டில் உலகளாவிய ஆன்லைன் சூதாட்டச் சந்தையில் ஐரோப்பா சுமார் 50% பங்கு கொண்டுள்ளது. எனவே ஐரோப்பியர்களுக்காக நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.
- ✦ உலக அளவில் ஐந்து பேரில் ஒருவர் என்ற விகிதமாக சுமார் 882 மில்லியன் மக்கள் ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடுகின்றனர். இந்த கொடிய அடிமைத்தனத்திலிருந்து இப்பெரும் ஜனக் கூட்டம் வெளிவர ஜெபிப்போம்.
- ✦ ஆன்லைன் சூதாட்டத்தில் பெண்களை விட ஆண்கள் அதிக அளவில் ஈடுபடுகின்றனர். இவர்களின் அறியாமையை தேவன் போக்கும்படியாய் ஜெபிப்போம்.
- ✦ இழந்தப் பணத்தை மீண்டும் பெறவேண்டும் என்ற எண்ணத்தில், தொடர்ந்து அதிகமாக பணம் வைத்து சூதாடும் மன நிலையிலிருந்து மக்கள் விடுதலை பெற ஜெபிப்போம்
- ✦ சூதாட்டத்தை நிறுத்த அல்லது குறைக்க முயற்சிக்கும்போது அமைதியின்மை, எரிச்சல், பதட்டம் போன்றவை ஏற்படுகிறது. இதனை சூதாட்டத்தில் ஈடுபடுவோர்கள் வெற்றியோடு மேற்கொள்ள ஜெபிப்போம்.
- ✦ உலக அளவில் சூதாட்ட அடிமைத்தன உதவி அழைப்புகள் 33% அதிகரித்துள்ளது. இந்நிலை நம் தேசத்தில் உயராமல் தேவன் காத்துக் கொள்ள தொடர்ந்து ஜெபிப்போம்.

# உங்க சாமி எங்க பாஷையில பேசுவாரா?

(வேதாகம மொழி பெயர்ப்புப் பணி)

# குருக்ஸ் மொழி



இந்தப் பத்திரிக்கையின் மூலமாக ஒவ்வொரு மாதமும் உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த மாதம் குருக்ஸ் மொழிபெயர்ப்புப் பற்றியும், சபை வளர்ச்சியில் குருக்ஸ் மொழியில் வேதாகமம் பற்றியும் சற்று ஆராய்வோம்!.

## குருக்ஸ் ஊழிய அறிமுகம்:

36 கோட்டைகள் சத்தீஸ்-36 கட்-கோட்டை என்று பொருள்படும். சத்தீஸ்கட் மாநிலம் இந்தியாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ளது. சத்தீஸ்கட் மாநிலத்தில் சத்தீஸ்கடி மற்றும் ஹிந்தி மாநில மொழியாக பேசப்பட்டு வருகிறது. குருக்ஸ் பழங்குடியினர் சத்தீஸ்கட் மாநிலத்தில் வாழும் ஒரு பூர்வபழங்குடி மக்களாவர். சுமார் 40 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட இவர்கள் பேசும் மொழியானது குருக்ஸ். அதில் சத்தீஸ்கட் மாநிலத்தில் மட்டும் 8 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் குருக்ஸ் மொழியைப் பேசுபவர்களாவர். மேலும் அப்பகுதியில் கொருவா, சர்குஜியா, ஹால்பீ, கொருக்கு மொழிகளும் பேசப்படுகிறது.

## வேதாகம மொழிபெயர்ப்பு ஊழியம்

இந்த ஊழியம் 2001ஆம் ஆண்டு சத்தீஸ்கட் மாநிலத்தில் அருட்திரு. தாமஸ் அண்ணன் மற்றும் திருமதி. ரெஜினா தாமஸ் அக்கா அவர்களால் துவங்கபட்டு, 2007ஆம் ஆண்டு புதிய ஏற்பாட்டை குருக்ஸ் மொழியில் மொழிப்பெயர்த்து முடித்து 2014இல் பிரதிஷ்டை செய்தனர். அந்த மொழியில் புதிய ஏற்பாட்டை Audio Bible வடிவிலும் வடிவமைத்து எல்லா திருச்சபைகளிலும் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக பயன்படுத்தபட்டு வருகிறது.

## FMPB ஊழியம் ஆரம்பம்:

1983ஆம் ஆண்டு அருட்திரு. கருணாகரன் அண்ணன் மற்றும் திருமதி. எலிசபெத் அக்கா அவர்களால் ஒராவன் மக்கள் மத்தியில் ஊழியம் துவங்கபட்டது. தற்போது 18,000க்கும் அதிகமான விசுவாசிகள் தேவனுக்குச் சாட்சிகளாக வாழ்ந்து வருகின்றனர். இங்கு 255 ஆராதனை குழுக்களும், 14 பணித்தளங்களும், 15 ஊழியர்களும், 42 சுதேஷ ஊழியர்களும் இருக்கின்றனர்.

## ஊழியத்தின் முக்கிய சாதனைகள்:

மொழி பெயர்ப்பின் அடிப்படைப் பணிகளான ஒலியியல் மற்றும் அகராதி உருவாக்கப்பட்டதுடன், எழுத்துருவிலும் வெளியிடப்பட்டுள்ளது. புதிய ஏற்பாடு மற்றும் Audio Bible போன்றவை மக்களுக்கு தரபட்டதோடு, முதியோர் கல்வி பாடத்திட்டங்களும் தயாரிக்கப்பட்டு, பயிற்சிகள் அளிக்கப்பட்டு 45 கிராமங்களில் ஒழுங்கும், கிரமுமாக வகுப்புகள் நடைபெற்று வருகிறது. மேலும் குருக்ஸ் மொழியில் பாடல் புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம், யோசுவா, யோபு, சங்கீதம், நீதிமொழிகள் போன்ற புத்தகங்கள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.



## முக்கியமான ஜெபக்குறிப்புகள்:

- ✦ முழு வேத மொழிபெயர்ப்புப் பணியையும் 2035ஆம் ஆண்டிற்குள் முடிக்கவும், குறிப்பாக ஏசாயா, எரேமியா மற்றும் எசேக்கியேல் போன்ற பழைய ஏற்பாட்டுப் புத்தகங்கள் மொழிபெயர்க்கப்படவும் ஜெபிப்போம்.
- ✦ சங்கீதம் மற்றும் நீதிமொழிகள் அடங்கிய புதிய ஏற்பாடு தயாரிப்புப் பணிகள் விரைவில் முடிவடையவும், உதவிப் பணியாளர்களின் ஒத்துழைப்பிற்காகவும் ஜெபிப்போம்.
- ✦ வேதாகம மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபடும் அனைவருக்கும் தேவன் சுகம், பெலன் கொடுத்து குறித்த நேரத்தில் மொழிபெயர்ப்புப் பணி முடிக்கப்பட ஜெபிப்போம்.

## சிந்திப்பீர்:

*ஒரு தனிநபரின் கீழ்ப்படிதலும், ஆழ்ந்த அர்ப்பணமும் சத்தீஷ்கட் மாநிலத்தின் குருக்ஸ் மொழியில் அவர்கள் மூலமாய் வேதாகமத்தை மொழிபெயர்த்து தந்த தேவன் உங்களைக் கொண்டும் அசாத்தியமான காரியங்களைச் செய்ய முடியும். இந்த தொடரோட்டத்தில் கலந்துக்கொள்ள உங்களையும் தேவன் அழைக்கிறார்.*

PRAYER POINTS - வாசலுக்கு வெளியே

Ms. Wiselin

# VIRAL NEWS பரபரக்கும் களத்தில் உன் விண்ணப்பம்...




## PROFITS OVER PASSION

FIFA வின் உலகக் கோப்பை வணிக மாதிரியானது, பல Billion Dollars அளவிலான உலகளாவிய சூதாட்ட வளர்ச்சியைத் தூண்டுவதோடு, Host Countriesயை உள்கட்டமைப்பிற்காக பெரும் பொதுக் கடனில் ஈடுபடுத்துவதன் மூலம் நிறுவனம் பெரும் லாபத்தை பெறுகிறது.

- FIFAவின் பேராசை கொண்ட அமைப்பு தகர்க்கப்படவும், Host Countries கடனிலிருந்து பாதுகாக்கப்படவும், இளைஞர்கள் சூதாட்ட அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்படவும் ஜெபிப்போம்.

## TRAGEDY OUTSIDE PUB

சென்னையில் பார் ஒன்றில் நடந்த தகராறின் காரணமாக SUV ஒன்று வேண்டுமென்றே 18 வயது சிறுமி ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோதியது. இதன் விளைவாக சிறுமி தனது உயிரை இழந்தாள்.

- மது அருந்துதல் மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கும் இன்றைய இளைஞர்களின் விடுதலைக்காகவும், வாலிபர்கள் தேவ பயத்தோடு வாழவும் ஜெபிப்போம்.







## STOLEN FUTURE

Paper Leaks மற்றும் கார்ப்பரேட் பேராசை ஆகியவை பொதுக் கல்வியை அழித்து, குடும்பங்களைத் திவாலாக்குகின்றன. அதே நேரத்தில் பொறுப்பற்ற அமைச்சர்கள் தங்கள் அதிகாரத்தைத் தக்க வைத்துக்கொள்கிறார்கள்.

- கல்வி ஊழல்கள் தடுக்கப்படவும், கடினமாக முயற்சி செய்யும் இளைஞர்கள் நியாயமான வாய்ப்புகளைப் பெறவும் ஜெபிப்போம்.

## PROGRESS OR PARADISE?

இந்தியாவின் ₹20,000 Cr மதிப்பிலான Great Nicobar மெகா-Port மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சியை உறுதியளிக்கிறது, ஆனால் இலாபத்திற்காக முக்கிய பவளப்பாறைகள் மற்றும் பூர்வீகத் தாயகங்களைத் தியாகம் செய்ததற்காக கடுமையான பின்னடைவை எதிர்கொள்கிறது.

- கிரேட் நிக்கோபார் என்னும் பெரும் நிறுவனத்தின் பேராசையிலிருந்து நம் நாட்டை தேவன் பாதுகாத்துக்கொள்ள ஜெபிப்போம்.







## CLASH OF WORLDS

2026 உச்சிமாநாடு (Corporatocracy) பெருநிறுவன பேராசை, பொருளாதார ஏற்றத்தாழ்வு, காலநிலை அலட்சியம் மற்றும் உயரடுக்கு புவிசார் அரசியல் கட்டுப்பாடு (High Tier Geopolitical Control) ஆகியவற்றின் மீது கலவரங்களைத் தூண்டியது.

- பணக்காரர்களுக்கும், ஏழைகளுக்கும் இடையிலான ஆபத்தான இடைவெளியைச் சரிபடுத்தவும், உடைந்த உலகளாவிய அமைப்புகளுக்கு தேவன் அமைதியையும், நீதியையும் கொடுக்கவும் ஜெபிப்போம்.

# பிலிப்பியில் பவுலின் வைராக்கியம்

MR. ISRAEL NATHANIEL EDWARD



தேவன் எவ்வாறு பவுலைத் தேர்ந்தெடுத்து, புறஜாதியாரிடையே வைராக்கியமாக பணிசெய்யும் ஒரு மிஷனெரியாக உருவாகும்படி பயிற்றுவித்தார் என்பதை நாம் கடந்த சில மாதங்களாகக் கற்றுக்கொண்டு வருகிறோம். அதன் விளைவாக ஆசியா மைனர் பகுதியில் பல சபைகள் நிறுவப்பட்டன. இருப்பினும், தேவன் தம்முடைய ஊழியக்காரர்களான பவுலுக்கும், பர்னபாவுக்கும் சில மாதங்கள் ஓய்வளித்தார்; அவர்கள் தங்களை அனுப்பிய அந்தியோகியா சபையில் விசுவாசிகளுக்கிடையே மீண்டும் ஊழியம் செய்தனர் (அப். 14:28; 15:35).

புறஜாதியாருக்கான ஊழியத்தின் மீதான பவுலின் ஆர்வம் அவரை நீண்ட நாட்கள் அங்கே தங்க விடவில்லை. ஆகவே, பவுல் அவர்கள் முன்பு சுவிசேஷத்தை அறிவித்த இடங்களுக்கு மீண்டும் செல்வோம் என்று பர்னபாவை ஊக்குவித்தார். அவர்கள் பயணத்திற்குத் தயாரானபோது, யோவான் மாற்கு அவர்களுடன் வர வேண்டுமா என்பதில் கடுமையான கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஆனால், தேவனுடைய கால அட்டவணையில் பவுல் முழுமையான தலைமைப் பொறுப்பை ஏற்க வேண்டிய நேரம் வந்திருந்தது. எனவே, பவுலும், பர்னபாவும் பிரிந்தனர். இருப்பினும், இருவரும் இளம் தலைவர்களைப் பயிற்றுவிக்கும் பணியைத் தொடர்ந்து செய்தது குறிப்பிடத்தக்கது. பர்னபா, மாற்குவைத் தன்னுடன் அழைத்துச் சென்றார்; பவுல் சீலாவைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். பின்னர் தீமோத்தேயுவையும் தன் குழுவில் சேர்த்துக் கொண்டார் (அப். 15:36-41; 16:3).

பவுல் மிகுந்த ஆர்வத்துடன் கருங்கடலின் கரையோரப் பகுதிகளில் ஊழியம் செய்ய முயன்றார். ஆனால், பரிசுத்த ஆவியானவர் அவரை ஆசியாவில் வார்த்தையைப் பிரசங்கிக்க அனுமதிக்கவில்லை. அதற்கு மாறாக, அவரை முற்றிலும் எதிர்த்திசையில் பயணிக்கச் செய்தார் (அப். 16:6-8). பவுல் தேவனுடைய சித்தத்தை உணருவதில் மிகவும் உணர்வுள்ளவராக இருந்ததோடல்லாது, அதற்குக் கீழ்ப்படிவதற்கும் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருந்தது ஆச்சரியமானது. ஊழியம் முழுமையாக தேவனுக்கே சொந்தமானது; அதன் திசையைத் தீர்மானிக்கத் தனக்கு உரிமை இல்லை என்பதை அவர் தெளிவாக அறிந்திருந்தார். இது அவருக்கு எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் ஆவிக்குரிய வலிமையை அளித்தது. தேவன் தமது இறையாண்மைமிக்க திட்டத்தில் பவுலை, சுவிசேஷத்தை அறிவிக்க ஐரோப்பாவிற்குக் கொண்டு சென்றார்.

தேவன் பவுலையும், சீலாவையும் நேராக மக்கெதோனியாவின் முக்கிய நகரமான பிலிப்பிக்குக் கொண்டு சென்றார். அங்கு யூதர்களின் ஜெப ஆலயம் எதுவும் காணப்படவில்லை; இருப்பினும், சில தேவபயமுள்ள புறஜாதியாரை அவர்கள் சந்தித்திருக்கலாம். வழக்கம்போல், யேகோவாவைப் பற்றி அறிந்திருந்தவர்களிடையே பவுல் தன் ஊழியத்தைத் தொடங்கினார். தேவன் லீதியாளின் இருதயத்தைத் திறந்தார்; அவள் ஐரோப்பாவில் கிறிஸ்துவுக்காக மனந்திரும்பிய முதல் நபர்களில் ஒருவரானாள். மெதுவாக சபை வளரத் தொடங்கியது.

ஆனால், சாத்தான் தனது முகவரின் மூலம் இந்த வளர்ச்சியைத் தடுக்க முயன்றான். குறிசொல்லும் ஆவியைக் கொண்டிருந்த ஒரு அடிமைப் பெண் பல நாட்கள் பவுலையும், அவரது குழுவினரையும் பின்தொடர்ந்து, “இந்த மனிதர்கள் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர்கள்; இரட்சிப்பின் வழியை உங்களுக்குப் பிரசங்கிக்கிறார்கள்” என்று கூவிக் கொண்டிருந்தாள். இறுதியில், பவுலின் பொறுமை எல்லையை எட்டியபோது, அவர் அந்தப் பெண்ணிலிருந்த பிசாசைத் துரத்தினார். இதனால் அவளுடைய எஜமானர்களுக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்பட்டது. ஆகவே அவர்கள் கலகத்தை ஏற்படுத்தினர். அதன் விளைவாக பவுலும், சீலாவும் கொடூரமாகக் கம்புகளால் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர் (அப். 16:12-24).

இந்தத் துன்பங்களுக்கிடையிலும் பவுலும், சீலாவும் மனத்தளர்ச்சி அடையவில்லை. அவர்கள் ஜெபத்திலும், துதிப்பாடல்களிலும் ஆண்டவரை ஆராதித்துக்கொண்டே இருந்தனர். இதனால் சக கைதிகளுக்கும் தேவனை அறியும் வாய்ப்பு கிடைத்தது. அற்புதமான பூகம்பத்தின் மூலம் தேவன் எல்லா கைதிகளையும் சங்கிலிகளிலிருந்து விடுவித்தார். இதன் விளைவாக சிறைக்காவலனும், அவன் குடும்பத்தாரும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டனர் (அப். 16:25-34).

### இதன் விளைவு என்ன?

பிலிப்பி சபை, பவுலின் மிகவும் ஆரோக்கியமான மற்றும் விசுவாசமிக்க சபைகளில் ஒன்றாக வளர்ந்தது. அப்போஸ்தலர் 16ஆம் அதிகாரத்தில் கூறப்பட்ட நிகழ்வுகளுக்குப் பிறகும் அது தொடர்ந்து நிலைத்திருந்தது. மற்ற சபைகள் உதவாத சமயங்களில் கூட, பிலிப்பியர் பவுலுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முறை பொருளாதார உதவி செய்தனர் (பிலி. 4:15-16). பவுல் அவர்களுக்கு நன்றியுணர்வு, ஊக்கம் மற்றும் சந்தோஷம் நிறைந்த பிலிப்பியர் நிருபத்தை எழுதினார்.

இந்தச் சபை இரண்டாம் நூற்றாண்டிலும் அதற்குப் பிறகும் தொடர்ந்து இருந்தது. இதற்கான முக்கியமான ஆதாரங்களில் ஒன்று, இரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் வாழ்ந்த பாலிகார்ப்பின் பிலிப்பி கிறிஸ்தவர்களுக்கான கடிதமாகும். அடுத்த நூற்றாண்டுகளில், பிலிப்பி ரோமப் பேரரசின் முக்கியமான கிறிஸ்தவ மையமாக மாறியது. கிறிஸ்தவம் அந்நகரில் பல நூற்றாண்டுகள் நிலைபெற்றிருந்தது. பின்னர் போர்கள், படையெடுப்புகள், பூகம்பங்கள் மற்றும் நகரத்தின் வீழ்ச்சி காரணமாக, நடுக்காலத்தில் பிலிப்பி மெதுவாகக் கைவிடப்பட்டது.

### நாம் என்ன கற்றுக்கொள்கிறோம்?

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி நாம் ஊழியம் செய்தால், நீடித்த பலன்களின் மகிழ்ச்சியை அனுபவிக்க அவர் உதவுவார். இருப்பினும், இத்தகைய ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கை தவறான புரிதல்கள் அல்லது துன்புறுத்தல்களிலிருந்து எப்போதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தாது. ஆனால், தேவன் இப்படிப்பட்ட சோதனைக் காலங்களைத் தமது ராஜ்யத்தின் காரியத்தை முன்னேற்றவும், தமக்கே மகிமையைக் கொண்டுவரவும் பயன்படுத்த முடியும்.

-4ஆம் பக்கத் தொடர்ச்சி

**முடிவு:**

தாணின் வாழ்வில் காணப்படும் காரியங்கள் அனைத்தும் உண்மையை மறைத்து, புதிதான ஒன்றை நிலைநிறுத்த முயல்வதில் ஆர்வம் கொள்வதை நாம் பார்க்கமுடிகிறது. சுமார் 240km (150 மைல்) தூரம் கொண்ட தாண் முதல் பெயர்செபா என்ற பதம் வாக்களிக்கப்பட்ட கானான் தேசத்தின் வடக்கு மற்றும் தெற்கு எல்லையாக உள்ளது. நெகேவ் பாலைவனத்திலுள்ள “பெயர்செபா” உடன்படிக்கையைப் புதுப்பிக்கும் தேவனுடைய சத்தியத்தின் கிணறாகவும், தேவ திட்டத்திற்கு எதிரான மனித முயற்சியில் உருவான தாண், தேவனை மறக்கடிக்க முயலும் மாய சக்தியாகவும் விளங்குகிறது.

பிரியமானவர்களே! போலித்தனம் என்பது கண்களுக்கு மறைவாக வைக்கப்பட்ட மாயவலை. அதை அடையாளம் காண்பது மிகவும் கடினமானது. உண்மையைப் பற்றிய புரிந்துணர்வு இல்லையெனில் வீழ்ந்து போவது எளிதாகிவிடும். தாணின் பெயருக்கு கொடுக்கப்பட்ட இரண்டு அர்த்தங்களிலேயும் எத்தனை முரண்பாடுகள் உள்ளன. அவன் நியாயந்தீர்க்கிறவனா? அல்லது நியாயந்தீர்க்கப்பட்டவனா? அவன் தன்னை நியாயந்தீர்ப்பவனாக நிலைநிறுத்த முயன்று தோற்றுப்போன நியாயந்தீர்க்கபட்டவனின் அடையாளமாக அல்லவா வெளிப்படுத்தல் புத்தகத்தில் (அதிகாரம் 7) மறக்கப்பட்டு போனான். ஆம் தாணின் செயல்பாடுகளும், அவனைப் பற்றிய வேத விளக்கங்களும் நித்திய நீதிபதியாக வரவிருக்கும் கிறிஸ்துவுக்கு விரோதமாக நம்மைக் கொண்டு செல்லும் வழிமுறைகளைக் கொண்டுள்ளது.

**‘‘சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.**
**நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு’’**
**(2 தீமோ. 4:5)**



## வடதேசம் செல்ல அழைப்பும், அர்ப்பணித்து செல்லும் வீராங்கனையும்

*தேவனுக்கே மகிமை உண்டாவதாக! என் பெயர் பிரின்சஸ் சோபியா (B.Sc Statistics). நான் காலேஜ் 2ஆம் வருடம் படித்துக் கொண்டிருக்கும்போது, FMPBஇன் மூலமாக பெத்தேலில் நடந்த மூன்று நாள் மாநில முகாமின் வாலிபர் கூடுகையில் நான் கலந்துக்கொண்டேன். அங்கு இந்திய நாட்டு மக்களின் இரட்சிப்பின் தேவையைக் குறித்த பாரத்தைக் கர்த்தர் என் உள்ளத்தில் கொடுத்தார். அங்கு நடந்த சந்தியா வேளையில் “உன்னை தான் அழைக்கிறேன்” என்று செய்தியாளர் சொன்னபொழுது “கர்த்தர் என்னை அழைக்கிறார்” என்று உணர்ந்து, அன்றே என்னை முழுநேர ஊழியப்பணிக்கு ஒப்புக்கொடுத்தேன். ஆனால் அதைப் பற்றிய பயமும், குழப்பமும் அதிகமாக இருந்த பொழுது, கர்த்தர் வேத வசனத்தினால் என்னுடன் பேசி என்னை ஆறுதல்படுத்தினார். மேலும் அவரது அழைப்பை உறுதிப்படுத்த ஆதி. 12:1, அப். 7:3 போன்ற வசனங்களை எனக்குக் கொடுத்து, அவரது அழைப்பில் உறுதியாய் நிற்க உதவிச் செய்தார்.*

*மேற்படிப்பு படிக்க வேண்டும் என்ற ஆசை ஒரு பக்கமாக இருந்தாலும்,* **"என் மக்கள் வலது கைக்கும், இடது கைக்கும் வித்தியாசம் அறியாமல் இருக்கிறார்களே"** *என்ற கர்த்தரின் சத்தத்திற்கு கீழ்ப்படிந்து, கண்ணீரோடு நான் இந்த ஊழியத்திற்கு இப்பொழுதே செல்வேன் என்று முடிவெடுத்தேன். என் பெற்றோர்கள் நீ ஊழியத்திற்குச் செல்ல வேண்டாம், மேற்படிப்பு படித்தே ஆக வேண்டும் என்று நான் ஊழியத்திற்கு செல்லுவதை மறுத்தப்போதும், கர்த்தர் தாம் அழைத்த அழைப்பில் உறுதியாய் நிற்க எனக்கு உதவினார். மேலும் நான் என் பெற்றோர்கள் சம்மதத்தோடுதான் ஊழியத்திற்கு செல்வேன் என்று கர்த்தரிடம் கூறி தினமும் ஜெபித்தேன். கர்த்தரின் மகா பெரிய கிருபையால் ஊழியத்திற்கு செல்லவே கூடாது என்று சொன்ன என் பெற்றோர், ஒருநாள் அவர்களாகவே முன்வந்து நீ ஊழியத்திற்கு சென்று வா என்று கூறினார்கள். இப்படியாக கர்த்தர் என்னை ஒவ்வொரு நாளும் கரம் பிடித்து, ஒரு தகப்பன் பிள்ளையை கூட்டிச் செல்வதுபோல அற்புதமாக நடத்தி வருகிறார். தகுதியே இல்லாத என்னையும் அழைத்து, கைவிடாமல் நடத்துகிற தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம்.*

**ஜெப வேண்டுகோள்:**

*மிஷனெரி Training காரணமாக வட இந்தியா செல்லவிருக்கும் எனக்கு Instituteயிலும், Fieldயிலும் உணவு மாற்றம் மற்றும் பருவ மாற்றத்தின் காரணமாக உடல் நலக்குறைவு ஏற்படாதபடி தேவன் என்னை பாதுகாத்து, அவருடைய ஊழியத்தைத் தொடர்ந்து இறுதிவரைச் செய்ய தேவன் உதவி புரியும்படி எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.*






AHAVA வாலிபர் முகாம்





தமிழ் மாநில முகாம் ‘26









பெரியமலை தினம்




இளம் தம்பதியர் கூடுகை

# அவசரப்படாதே... அவதிப்படாதே...

## HANDLE WITH CARE

## BUILD ON THE RIGHT FOUNDATION

திருமணம் என்பது தேவனால் நியமிக்கப்பட்ட ஒன்று என்பதை நாம் அறிவோம். வேதத்தில் திருமணத்திற்கு ஏற்ற அடிப்படை சத்தியம் ஆதியாகமத்தில் காணப்படுகிறது. திரியேக தேவன் ஐந்து நாட்களில் யாவையும் படைத்து, ஆறாவது நாளில் மிருகங்களையும், மனிதனையும் படைத்தார். அவைகள் பலுகிப் பெருகும்படி ஆணும், பெண்ணுமாகப் படைத்தார். ஆனால் ஆதாமுக்கு ஏற்றத் துணை இல்லை (ஆதி. 2:20). மனிதனுடைய துணை வாழ்நாள் முழுவதும் ஒரு மிருகமாக இருக்க முடியாது. என்பதனால் தேவன் பெண்ணை உருவாக்கினார். மிருகத்தோடு வாழ்க்கை நடத்த மனிதனுக்கு முடியாது. நடத்தவும் கூடாது. மனிதனுக்கு ஒரு பெண்ணின் துணை தேவை என்று எண்ணிய தேவனாகிய கர்த்தர், தாம் மனுஷனிலிருந்து எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார் (ஆதி. 2:22). ஆதாமின் விலா எலும்பிலிருந்து பெண்ணை உருவாக்கினார். அவனுக்கு சமமாக இருக்க, பாதுகாக்கப்பட, அன்பாயிருக்க இருதயத்தின் பக்கத்திலிருந்து விலா எலும்பை எடுத்து மனுஷியை உருவாக்கினார்.

தேவன் பெண்களை மனிதனுக்காகப் படைக்கவில்லை. ஒரு பெண்ணை ஒரு ஆணுக்காக படைத்தார். எனவே ஒரு ஆண் பல பெண்களைத் திருமணம் செய்ய முடியாது. தேவன் ஒரு ஆணை ஆணுக்காகவோ, ஒரு பெண்ணை பெண்ணுக்காகவோ படைக்கவில்லை. எனவே ஓரினச் சேர்க்கை இருக்கக் கூடாது. அது பாவம். இவை தேவனுடைய நிபந்தனைகளும், அவருடைய வடிவமைப்புமாக இருக்கின்றன.

எனவே வாலிபர்களாகிய நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டிய காலகட்டத்தில் உள்ளோம். LGBTQ என்ற பயங்கரமான பாவ காரியங்கள் சகஜமாகிவிட்ட இக்காலத்தில் அநேக இளைஞர்களைத் திசைமாறிச் செல்ல வழிவகுக்கிறது. இவற்றுக்கு அங்கீகாரம் கேட்கின்றனர். LIVING TOGETHER வாழ்க்கைக்கு நீதிமன்றங்கள் அனுமதி வழங்கிவிட்டது. 'தேவனுடைய பிள்ளை' என வாழும் நீயோ, யாவற்றையும் சரியானபடி இனங்கண்டு, உன் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். பரிசுத்தமாக வாழ இயலவில்லையே என ஏங்கும் ஏராளமான இளைஞர்களின் ஏக்கம் காதுகளில் விழுகிறது. எப்பொழுதும் 2 சத்தங்கள் நம் காதுகளில் கேட்டுக்கொண்டே இருக்கும். அவை 'DO IT' 'DON'T DO IT'. நீ எந்த சத்தத்திற்கு கீழ்படிவாய். சாத்தானா? அல்லது பரிசுத்த ஆவியானவரா? ஆதி. 3:1-8. இந்த இரண்டு சத்தத்தை கேட்கிறோம். 1. கடவுளின் சத்தம் 2. எதிர்பாராத நேரம் வருகின்ற பிசாசின் சத்தம்.

| DO THIS | DON'T DO THIS |
|---|---|
| Why not? | Why don't?<br>No, No நான் செய்யவே மாட்டேன் |
| Just once | No, No ஒருபோதும் |
| Ok, not now but tomorrow | Shut your ears the voice of the devil. Guard your eye gate, mind gate, heart gate and hand gate. |

சீக்கிரம் செய்... உடனே செய்து விடு... HURRY ALWAYS COMES FROM THE DEVIL. அவசரப்படாதே, அமர்ந்திரு, அவர் பாதத்தில் காத்திரு. கர்த்தர் சிநேகிக்கிற பரிசுத்தம் வேண்டும் என ஜெபி. பிசாசானவன் நாம் எப்படியாவது திசைமாறிச் செல்ல நம்மை தாக்கிக் கொண்டேயிருப்பான். அசுத்தத்திற்கு இடம் கொடுத்து விடாதே. கோலியாத் என்ற ராட்சசனை தாவீது என்ற சிறியவன் ஜெயித்தது தேவ பெலத்தினால். நாமும் பரிசுத்தமாக வாழ இயேசுகிறிஸ்துவின் பெலன் தேவை.

கட்டுப்பாடுகள் பறந்தோடி நாம் எப்படியும் வாழலாம் என்ற கொள்கை வேகமாக பரவி வாழ்க்கையே கடினமாகிவிட்ட சூழலில், இயேசுவின் அடியவராகிய தம்பி, தங்கை உன் மனதில், சரீரத்தில், சமுதாயத்தில், ஆவிக்குரிய வாழ்வில் கட்டுப்பாட்டோடு வாழ கற்றுக்கொள். சமூக வலைத்தளங்களில் பேசி, பழகி உன் வாழ்வை இழந்துவிடாதே. அனுதினமும் வேதத்தை தியானித்து, ஜெபிக்க பழகிக்கொள். அவர் உன் வாழ்வை ஆசீர்வதித்து, அலங்கரிப்பார். நீ நினைப்பதற்கும், வேண்டிக்கொள்வதற்கும் அதிகமாக, உன் வாழ்வை ஆசீர்வதித்து, கனப்படுத்துவார். தேவ சித்தத்திற்கு முழுவதுமாக (100%) ஒப்புக்கொடுத்து விடு. உன் வாழ்விற்கு ஏற்ற துணையை அவர் தந்து, அநேகர் கண்டு வியக்கும்படி ஆசீர்வாதமான வாழ்வைத் தருவார்.

*அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி,*
*உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக.*
*(சங்கீதம் 20:4)*

# இரு குமாரர்களின் உவமை

*முன்னுரை:*

*இயேசுகிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தின் ஆழமான சத்தியங்களை உவமைகள் மூலம் மக்களுக்கு தெளிவாக எடுத்துரைத்தார். மத்தேயு 21:28–32இல் இடம்பெறும் இரு குமாரர்களின் உவமை, தேவனுடைய ராஜ்யத்தில் உண்மையான கீழ்ப்படிதல் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை விளக்குகிறது. இந்த உவமை வெறும் வார்த்தைகளைக் காட்டிலும் மனந்திரும்புதலும், அதனைத் தொடர்ந்துவரும் செயல்பாடுகள் தேவனுக்கு முக்கியமானவை என்பதையும் நமக்கு வலியுறுத்துகிறது*

*• ராஜ்யக் களத்தில் அழைப்பு அனைவருக்கும்:*

*தந்தை தனது இரு குமாரர்களையும் திராட்சைத் தோட்டத்தில் வேலைச் செய்ய அழைத்தார். இது தேவனுடைய ராஜ்யத்தில் சேவை செய்யும் அழைப்பு அனைவருக்கும் வழங்கப்படுவதைச் சுட்டிக்காட்டுகிறது. தேவன் எந்த மனிதனையும் புறக்கணிக்காமல் அனைவரையும் தனது பணியில் பங்கு கொள்ள அழைக்கிறார்.*

**"மகனே, நீ போய் இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்தில் வேலைசெய் என்றான்." (மத்தேயு 21:28)**

*• முதல் குமாரன் – மனந்திரும்புதலின் முன்மாதிரி:*

*முதல் குமாரன் ஆரம்பத்தில் போக மாட்டேன் என்று கூறினான். ஆனால் பின்னர் மனம் மாறி தோட்டத்தில் சென்று வேலை செய்தான். இது பாவ வாழ்க்கையில் இருந்தவர்கள் மனந்திரும்பி தேவனுடைய ராஜ்யத்தில் நுழைய முடியும் என்பது எடுத்துக்காட்டுகிறது. ஆயக்காரர்களும், பாவிகளும் யோவான் ஸ்நானகனின் செய்தியைக் கேட்டு மனந்திரும்பியதை இயேசு இதனுடன் ஒப்பிட்டு விளக்குகிறார்.*

*• இரண்டாம் குமரன் – வார்த்தைகளில் மட்டும் கீழ்ப்படிதல்:*

*இரண்டாம் குமாரன் "போகிறேன் ஐயா" என்று கூறினான். ஆனால் செல்லவில்லை. இது வெளிப்படையான பக்தியைக் காட்டினாலும், உள்ளத்தில் தேவனுடைய சித்தத்தின்படி நடக்காதவர்களைக் குறிக்கிறது. தேவனுடைய ராஜ்யத்தில் வெறும் வார்த்தைகள் போதுமானவை அல்ல. அவற்றை உறுதிப்படுத்தும் செயல்களும் அவசியமானவை.*

*• ராஜ்யக் களத்தில் தேவன் எதிர்பார்ப்பது செயல்முறை கீழ்ப்படிதல்:*

*இந்த உவமையில் தந்தையின் சித்தத்தை நிறைவேற்றியது முதல் குமாரன்தான். இதன் மூலம் தேவன் நம்மிடமிருந்து வெறும் வாக்குறுதிகளை அல்ல, உண்மையான கீழ்ப்படிதலுடன் கூடிய வாழ்க்கையை எதிர்பார்க்கிறார் என்பதை அறியலாம்.*

**"என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை."(மத்தேயு 7:21)**

*• ராஜ்யக் களத்தின் வெற்றிக்கான திறவுகோல் – மனந்திரும்புதல்:*

*இயேசு ஆயக்காரர்களும், வேசிகளும் மதத் தலைவர்களுக்கு முன்பாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள் என்று கூறினார். காரணம் அவர்கள் மனந்திரும்பி தேவனை நோக்கித் திரும்பினர். ஆனால் மதத் தலைவர்கள் தங்கள் இருதயங்களை மாற்றிக்கொள்ள தயாராக இருக்கவில்லை. தேவனுடைய ராஜ்யத்தில் உண்மையான வெற்றி மனந்திரும்புதலாலும், உறுதியான விசுவாசத்தாலும் பெறப்படுகிறது.*

*முடிவுரை:*

*இரு குமாரர்களின் உவமை ஒவ்வொரு விசுவாசியையும் ஆழமான சுயபரிசோதனைக்கு அழைக்கிறது. நாம் இரண்டாம் குமாரனைப் போல வார்த்தைகளில் மட்டும் கீழ்ப்படிதலை வெளிப்படுத்துகிறோமா அல்லது முதல் குமாரனைப் போல மனந்திரும்பி தேவனுடைய சித்தத்தை நடைமுறைப்படுத்துகிறோமா என்பதை சிந்திக்க தூண்டுகிறது. உண்மையான வெற்றி வெறும் வாய்மொழி உறுதிமொழிகளால் அல்ல. கீழ்ப்படிதலுடன் கூடிய செயல்முறை வாழ்க்கையின் மூலம் கிடைக்கிறது என்பதை இந்த உவமை தெளிவாக எடுத்துரைக்கிறது.*

*சிந்தனைக்கான கேள்விகள்:*

- ✦ *தேவனுடைய அழைப்புக்கு நான் எவ்வாறு கீழ்ப்படிகிறேன்?*
- ✦ *என் வாழ்க்கையில் மனந்திரும்புதலின் கனிகள் வெளிப்படுகின்றனவா?*
- ✦ *என் வார்த்தைகளும், செயல்களும் ஒன்றோடொன்று ஒத்துப்போகின்றனவா?*

**"நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள். (லூக்கா 13:3)**



REV. K. KINGSLEY JOHN

**4th WEEK MESSAGE - GOSPEL - ராஜ்ய களம்**

# கனம் பெற்ற யாபேஸ்

தேவனின் 'கிருபை' பெற்றுவிட்டால்
களிமண் மனிதனும் உயிர்க்காவியமாய் நிலைகொள்வான்,
நெருப்பில் வெந்த களிமண்தான் - இங்கே
புதுச் சரித்திரக் கோட்டையாய் உயிர்த்தெழுவான்!
சோதனையைச் சகித்து உயிர்மீட்சிக் கொள்ளும் மனிதன்
பெரும்பாக்கியம் பெற்றுச் சரித்திரம் பலப்பல புரிவான்!

பிரசவ வடுக்களோடு பிரபஞ்சப் பிரவேசம்,
'துக்கத்தின் மகன்' - பெற்றவளின் பெருமன்புத் தாய்ப்பாசம்,
உவர்க்கண்ணீரை மைதீட்டி உயிர்க்காவியம் எழுதிய கதை,
ஊமைச் சாபங்கள் விலகிப் புதுச் சரித்திரம் பிறந்த கதை,
சகோதரர் நடுவிலே மூலைக்கல் தலையானது - பெரும்
விசுவாச ஜெபங்கள் பெருமழை பொழிந்துயிர் ஜீவனானது.

எல்லையைப் பெரிதாக்கு - இறைவா!
இருளாதிக்க எதிரிகளை அதமாக்கு - தேவா!
உன் விரல்பட்டாலே உலகம் அதிரும்,
உன் விழிபட்டாலே சாபச் சரித்திரம் மாறும்!
விடியலின் தேசம் காண வேகம் தா தேவா - கொடும்
வீணரின் குணமறிய ஞானம் தா இறைவா!

தீங்கு அணுகாமல் வேலியாய் அணைத்துக்கொள் வேந்தே!
திவ்ய வாக்கின் வல்லமையால் வானத்தைத் திறந்துகொடு தேவே!
பெற்றவளின் பிரசவ வலியானது - பல
தலைமுறையின் ஆசீர்வாத வழியானது!
கண்ணீரின் பாதையெல்லாம் கானான் தேசமானது,
மண்ணான மனிதம் இங்கே பெரும் சரித்திரப் பேரானது!

ஜெபத்தால் சிந்தை மாறும்; சிந்தையால் செயல்கள் மாறும்!
கண்ணீர்க் கடலும் களிப்பாய் மாறும்! - பெரும்
காயத்தின் வடுக்களும் பாதையின் பூக்களாய் மாறும்!
கனவானாய் மாற்றியது கருத்தான ஜெபம்;
உயர்நிலைப் பெருமகனாய் மாற்றியது கண்ணீரின் ஜெபம்!
முடங்கும் முழங்கால்களின் தாழ்மை ஜெபமே - கொடும்
சாபங்களைச் சாம்பலாக்கிடும் போர் ஆயுதம் என்றுமே!



REV. ALBERT PRABHAKARAN

# இயேசு கிறிஸ்துவின் சீஷர் தோமா



**அறிமுகம்:**
இயேசு கிறிஸ்துவின் சீஷர்களில் ஒருவர் தோமா. இந்த கிறிஸ்தவ உலகம் எப்போதும் இந்த சீஷரை 'சந்தேகப்படும் தோமா' என்ற பட்டத்துடனேயே நினைவில் கொள்கிறது. ஏனெனில், ஆரம்பத்தில் இயேசுகிறிஸ்து மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை தோமா நம்பவில்லை. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் முழுமையான விசுவாசத்தைக் கொண்டிருப்பதில், அவருடைய இல்லாமை அந்த சீஷர்கள் குழுவில் ஒரு வெற்றிடத்தை உருவாக்கியது. இருப்பினும், அவருடைய இல்லாமை சீஷர்களின் சமூகத்திற்கு அவரோடு இன்னும் ஒரு முறை உரையாடுவதற்கும், அவருடைய உயிர்த்தெழுந்த சரீரத்தைக் காண்பதற்கும் மற்றொரு வாய்ப்பை உருவாக்கியது.

**இயேசு கிறிஸ்துவின் சீஷராகிய தோமா**
இயேசு தோமாவைத் தனது சீஷராகத் தேர்ந்தெடுத்தார். புனித யோவான் நற்செய்தியின்படி, தோமா இரண்டு கூற்றுகளுக்குப் பிரபலமானவர். முதலாவது, அவருடைய சந்தேக குணம், "நான் அவருடைய காயங்களில் என் விரலை விட்டுப் பார்த்தாலொழிய நம்பமாட்டேன்" என்ற கூற்றைக்கொண்டு வந்தது. இரண்டாவது, இயேசு தனது காயம்பட்ட பகுதிகளைத் தோமாவிற்குத் காண்பித்தபோது, அவர் கதறி அழுது, "என் ஆண்டவரே, என் தேவனே" என்று அழைக்கும் அளவிற்கு உறுதியான விசுவாசம் கொண்டார்.

**இயேசு கிறிஸ்துவின் சீஷராகிய தோமா மற்ற சீஷர்களிடமிருந்து வேறுபட்ட குணங்களைக் கொண்டிருந்தார்:**

★ **துணிச்சலானவர்:** இயேசு யூதேயாவிற்குத் திரும்ப விரும்பினார். அங்கு யூத மதத் தலைவர்களாலும், அவர்களது ஆதரவாளர்களாலும் அவர் கல்லெறிந்து கொல்லப்படும் அச்சுறுத்தல் இருந்தது. இருப்பினும், தோமா தனது கூற்றில் உறுதியாக நின்று, "நாமும் அவரோடேகூட மரிக்கும்படி போவோம்" என்று மற்ற சீஷர்களிடம் கூறினார் [யோவான் 11:16].

★ **இயேசு கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரிக்கத் தயாராயிருந்தவர்:** சீஷர்களின் குழுவில் ஒரு பயிற்சி மாணவராக இருந்தபோதே, இயேசு கிறிஸ்துவிற்காகத் தனது உயிரைக் கொடுக்க தோமா தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார் என்பது ஆச்சரியத்திற்குரியது. அவர் யூதத் தலைவர்களுக்கோ, யூதச் சட்டங்களுக்கோ பயப்படவில்லை. இயேசு கிறிஸ்துவே மேசியா என்றும், அவர் அற்புதங்களைச் செய்வார் என்றும், இரட்சிப்பின் வழியைக் காட்டுவார் என்றும் நம்பி, அவருக்காக வாழத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த செயல்முறையே சீஷத்துவம் ஆகும்.

★ **இயேசு கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மையை வெளிப்படையாகப் பிரகடனம் செய்தல்:** இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் புரிந்துகொள்வதில் தோமா சந்தேகம் கொண்டிருந்தார். இருப்பினும், மற்ற சீஷர்கள் யாரும் மரணத்திலிருந்து அவர் உயிர்த்தெழுந்த வல்லமையைப் பிரகடனம் செய்யவில்லை. தோமா உயிர்த்தெழுந்த இயேசுவின் குரலைக் கேட்டு, அவருடைய உயிர்த்தெழுந்த சரீரத்தைத் தொடுவதற்கு அவர் அழைப்பு விடுத்த அந்த கணத்தில், அவர் உறுதியடைந்தார்; அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை அவரால் மறுக்க முடியவில்லை. அவர் இப்போது உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்கு மிக அருகில் நிற்கிறார். அவருடைய சரீரம் கண்களுக்குத் தெரிகிறது, அவருடைய குரல் காதுகளில் கேட்கிறது. "நீர் என் தேவனும் என் ஆண்டவனுமாய் இருக்கிறீர்" என்று அவரால் பிரகடனம் செய்ய முடிந்தது. தோமா அவருடைய பௌதீக சரீரத்தைக் காண விரும்பினார்; ஆனால் அவரால் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த தெய்வீக சரீரத்தைக் காண முடிந்தது. 'சந்தேகத்திலிருந்து' 'விசுவாசத்திற்கு' மாறிய இந்த மனநிலை மாற்றம், இந்த நிகழ்விலிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சிறந்த பாடமாகும்.

★ **இயேசு கிறிஸ்துவுடனான தனது தொடர்பில் கேள்வி கேட்பவராகவும், தன்னம்பிக்கை உடையவராகவும் இருத்தல்:** வரலாற்றுச் சிறப்புமிக்க இராப்போஜன நிகழ்வின் போது, தான் பிதாவினிடத்திற்குப் போவதாக இயேசு கூறினார். பிதா இருக்கும் இடத்தையும், பிதாவினிடத்திற்குச் செல்லும் வழியையும் இயேசு அறிவார். இருப்பினும், தோமா தான் அவர் செல்லும் இடத்தைப் பற்றி அறியாதவராக, அவரிடம் கள்ளமில்லாமல் கேள்வி கேட்டார். பிதாவைச் சென்றடையும் வழியையும், அவசியமான தங்குமிடத்தையும் புரிந்துகொள்ளும் அளவுக்கு அவர் தைரியமாக இருந்தார்.

தோமாவின் கேள்வி சந்தேகத்திற்குரியதாக இருந்தாலும், அது தர்க்கரீதியானது. தோமா அவரைப் பற்றி அதிகம் அறிய விரும்பினார், மேலும் அவருடைய பதிலை ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றத் தயாராக இருந்தார். சந்தேகமுள்ள ஒரு கேள்வியிலிருந்த சந்தேகமற்ற விசாரணை, ஒரு 'சந்தேகமற்ற பதிலைக்' கொண்டு வந்தது. அது அவரைப் பற்றிய மாற்ற முடியாத சத்தியமாகும். இயேசு அவருக்குப் பிரதியுத்தரமாக, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்' என்றார்.

**இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறுதலுக்குப் பிந்தைய தோமாவின் பிற்கால வாழ்க்கை நிகழ்வுகள்:**
திருச்சபை வரலாறு தோமா ஒரு புத்தகத்தை எழுதினார் என்று பதிவு செய்துள்ளது, ஆனால் அது அறிஞர்களாலோ அல்லது புதிய ஏற்பாட்டுத் திருமுறைச் சட்டத்தாலோ (Canon) ஏற்றுக்கொள்ளப்படவில்லை. அது 'அபோக்ரிபா' (தள்ளுபடி ஆகமங்கள்) என்று கருதப்படுகிறது. கி.பி. 52இல் தோமா ஒரு கலாச்சார எல்லைக் கடந்த மிஷனெரியாக இந்தியாவுக்கு வந்து, இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியைப் பரப்பினார் என்று திருச்சபை வளர்ச்சி வரலாறு பதிவு செய்துள்ளது. தோமாவினால் நிறுவப்பட்ட திருச்சபைகள் இன்றும் கேரளாவிலும், தமிழ்நாட்டிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது. தோமா கி.பி 72இல் சென்னையில் உள்ள மயிலாப்பூரில் இறந்தார். தோமா இந்தியாவுக்கு ஒரு மிஷனெரியாக வந்தார் என்பதும், நற்செய்திக்காக ஒரு இரத்த சாட்சியாக மரித்தார் என்பதும் இன்றும் வரலாற்று ரீதியான சான்றாக உள்ளது.

**FMPB தோமாவைப் போன்ற சீஷர்களை எதிர்பார்க்கிறது:**
நீங்களும் FMPB இயக்கத்தில் இணைந்து, கலாச்சாரம் கடந்த மிஷனெரியாக இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை ஒருமுறை கூட கேள்விப்படாத மக்களினங்களுக்கு சுவிசேஷமாக அறிவிக்க உங்களை அன்புடன் அழைக்கிறது. தோமாவைப் போல, இயேசு கிறிஸ்துவோடு ஒரு சந்திப்பைப் பெற்றவர்கள் இந்த சிறந்த அமைப்பில் இணைய வரவேற்கப்படுகிறார்கள். மாறாத கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு ஒரு நவீன கால தோமாவாக இருங்கள். வாருங்கள், இயக்கத்தில் இணையுங்கள்!


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
"சுடர்களை போல பிரகாசியுங்கள்" - பிலிப்பியர் 4:15
C.S.I - TND - ஆறுமுகநேரி வட்டார சேகரங்கள்
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
இணைந்து நடத்தும்
வாலிப
சீஷத்துவ முகாம்
(A Special unique spiritual programme for Genz)
நாள் : 12.07.26 (ஞாயிறு)
நேரம் : மாலை 3.00 மணி
இடம் : ஆபிரகாம் நகர் கடற்கரை
செய்தி : FMPB GENZ TEAM, சென்னை
வாலிபர்கள் அனைவரும் பங்கு பெற அன்புடன் அழைக்கிறோம்.
தொடர்புக்கு: அருள்திரு. T. Y. P. ஆசீர், FMPB
9444393228


பேர் சொல்லி அழைப்பு
ஏசாயா 43:1
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
பட்டாபிராம் - தெற்கு பிராந்தியம்
வாலிபர் கூடுகை
நாள் : 19.07.26 (ஞாயிறு)
நேரம் : மாலை 3.00 மணி முதல்
இடம் : JCBF ஆலயம், வெள்ளவேடு
(Opp. - Coca-Cola Company)
செய்தி : Rev. J. டேனியல் அருள்மணி, FMPB - சென்னை
மிஷனெரி பகிர்வு : Rev. T. யுவனேஷ், FMPB - குஜராத்
சிறப்பு சாட்சி : Eva. D. மதியழகன் - சென்னை
வயது : 18 முதல் 30 வரை
LOVELY SONGS
ENGAGING SESSIONS
INSPIRING MESSAGES
சபை பாகுபாடின்றி கலந்துக்கொள்ள
வாலிபர்களை அன்புடன் அழைக்கிறோம்!
இரவு உணவு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது
தொடர்புக்கு: FMPB – 98419 36067, 98419 10411


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
கேளம்பாக்கம் பணி மாவட்டம் நடத்தும்
இளம் தம்பதியர்
கூடுகை
நாள் : 26.07.26 (ஞாயிறு)
நேரம் : மாலை 5.00 மணி முதல்
இடம் : #6/298, M. K. Stalin 4th Cross Street,
Thalambur, Chennai – 600 130.
செய்தி :
Rev. J. டேனியல் அருள்மணி,
FMPB - சென்னை
சிறப்பு நிகழ்ச்சி &
நடைமுறை ஆலோசனை:
Mr. Benjamin & Mrs. Ahi Benjamin
Couples
Pray Together
Stronger in Faith,
Closer in Love
ONLY for COUPLES with 0 to 12 years of marriage
தொடர்புக்கு: FMPB – 77082 73734


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு -
தமிழ்நாடு & பாண்டிச்சேரி
மாநில
உபவாச
ஜெப முகாம்
நாள் & நேரம் : 2026 ஆகஸ்டு 7 வெள்ளி காலை 10 மணி முதல்
9 ஞாயிறு மதியம் 1 மணி வரை
இடம் : அன்றன்றுள்ள அப்பம் ஜெபமண்டபம்
கிறிஸ்துகுல ஆசிரமம், திருப்பத்தூர்
செய்தியாளர்கள் : Rev. I. K. ஆபிரகாம்,
முன்னாள் பொதுச்செயலாளர், FMPB
Rev. விஜய் பி. ஐசக்
பொதுச்செயலாளர், FMPB
பாரத தேசம் இயேசுவின் அன்பினைக் கண்டிட,
தேவனின் பாதத்தில் அமர்ந்து, உபவாசித்து ஜெபிப்போம் வாருங்கள்!
தொடர்புக்கு: FMPB – ஜெபப்பிரிவு
94888 05454, 94443 96208